செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௩] வள்ளுவர் ஆண்டு ௨௦௧௦, வைகாசி, June '79 [பரல்- ௧௦

‘செந்தமிழ்ச் செல்வி’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

“செந்தமிழ்ச் செல்வி”

ஆண்டுக் கையொப்பம்
(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருந	திருவள்ளுவர் ஆண்டு உ௰௧௦, வைகாசி சூன் 1979	பரல் ௧௦

புலவர் புகழ் வளர்த்த கழகம்

சென்ற நூற்றுண்டின் இறுதியில் தமிழ்மொழி - தமிழ் இனத்தின் விடிவெள்ளியாய்த் தோன்றினர் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள். அவர்தம் தமிழ் வணக்கச் செய்யுள் அயர்ந்து கிடந்த தமிழினத்திற்குப் பள்ளியெழுச்சிப் பாடலாய் அமைந்து கண்விழிப்பித்தது. ஆசிரியர் மறைத்திரு மறைமலையடிகளார் தம் அஃகியகன்ற நுண்ணிய ஆராய்ச்சிவன்மையாலும், பல்துறை அரும்பணிகளாலும் தமிழினத்தை எழுச்சி கொள்ளச் செய்து முன்னேற்றப் பாதையில் முனைந்து நடையிடச் செய்தார். அடிகளார் நெறியைக் கடைபிடித்துத் தமிழுக்கும் தமிழினத்திற்கும் நற்பணிகள் ஆற்றிய பெருமக்கள் பலராவர். சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் தமிழ்ப் பேரறிஞர்களின் வளர்ச்சிக்கும் நற்பணிகளுக்கும் பல்லாற்றானும் துணை நின்றுள்ளது; அவர்தம் புகழ் நிலைக்குமாறு பணியாற்றியுள்ளது. மனோன்மணீயம் பற்பல பதிப்புக்கள் கழகத்தின்வழி வெளியிடப்பட்டுள்ளது. மனோன்மணீயம் போலும் நூல்கள் இன்னுஞ்சில வெளிவருதல் நன்றெனக்கருதிப் பேராசிரியர் சுந்தரனார் அவர்கள் பெயரில் கழகம் ஒரு நாடகப் போட்டிப் பரிசுத் திட்டத்தை நிறுவியுள்ளது. அதன்வழி மனோன்மணீயத்தை ஒருவாறு அடியொற்றிய அனிச்சஅடி என்னும் நாடகம் வெளியிடப்பட்டுள்ளது. அண்மையில் ஊமைக்குயில் என்னும் நாடகமும் கழகவழி வெளிவந்துள்ளது.

தமிழினத்தின் துயில் நீக்கிய பேராசிரியர் சுந்தரனாரின் நினைவு தமிழ்மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நிலை பெற வேண்டியது இன்றியமையாததாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையிலமைந்த தமிழ் நாட்டரசு பேரா. சுந்தரனாரின்

பாடலை (ஒரு வரியை நீக்கிவிட்டேனும்) அரசின் தமிழ் வணக்கப் பாடலாக அறிவித்தது; கடைப்பிடித்தது. ஆயினும் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் போதாயினும், அதன் பின்னராயினும் பேராசிரியரின் உருவச்சிலை அமைக்கவும் இல்லை; வேறு நினைவுக் குறிகள் நிறுவவுமில்லை. இதுபற்றிச் செந்தமிழ்ச் செல்வியில் பன் முறை சுட்டிக் காட்டியுள்ளோம்; வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

கழகம் பேரா. சுந்தரனாரின் பெயர் விளங்கும் வண்ணம் நாடகப் போட்டிப் பரிசுத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்தி யதுபற்றி மேலே கண்டோம். இத் திட்டத்தின் முதற்பரிசு பெற்ற இலக்கிய நாடகமான அனிச்சஅடி நூல் விற்பனை வருவாயில் 10% தொகையைப் பேராசிரியர் சிலைவைப்புக்கெனத் தொடர்ந்து ஒதுக்கி வருகின்றது. மனோன்மணீயம் மட்டுமன்றிப் பேராசிரியர் வரைந்த நூற்றொகை விளக்கம் என்னும் மற்றோர் அரிய நூலையும், அஃது எளிதில் விற்பனையாகாததென்று தெரிந்தும் வெளியிட்டுப் பரப்பியுள்ளது.

மாணாக்கர்க்குப் பாடமாக வைக்கப்படுதலின் மற்றுஞ் சில பதிப்பகத்தாரும், பேராசிரியர்கள் சிலரும் பல்வேறுவடிவில் மனோன் மணீயத்தை வெளியிட்டுள்ளனர். ஆயினும் மனோன்மணீயத்தின் பெருமை விளங்கவும் பேரா. சுந்தரனாரின் புகழ் பெருகி நிலைபெற வும் கழகமே பல்லாற்றானும் பணியாற்றி வருகின்றதென்பது வெளிப்படை.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் அயராது தொண் டாற்றிவரும் தமிழ்ச் சான்றோர்களின் பெருமையையும் புகழையும் பல்லாற்றானும் வளர்த்துவருவது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆகும். புலவர் பெருமக்கள் ஆன்றவிந்தடங்கிய சான் றோர்கள் ஆவர். தம்மை நாடிவரும் தமிழ் மாணவர்கட்கு ஓதி, உணர்வித்துத் தமிழ்ச் செல்வத்தை வாரி வழங்கி வருபவர்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்குள்ள பேரூர்களிலும் சிற்றூர்களிலும் இருந்துகொண்டு தம்மாலியன்ற தமிழ்த் தொண்டு செய்து வந்தவர்கள். அத்தகைய திறன்மிக்க சான்றோர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள்தம் ஆற்றலை உலகறியச் செய்த பெருமை கழகத்திற்கு உண்டு. அவர்களுடைய ஆற்றல்மிகு படைப்புக்களை அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழன்னைக்குப் பெரு மகிழ்ச்சியைக் கழகம் ஊட்டியுள்ளது. கழகம் அவர்களை அணுகி, ஆற்றலை உணர்ந்து, உரிய வழிகளில் அரிய நூல்களைப் படைக்கச் செய்து, அவற்றை அழகுற வெளியிட்டிராவிடில் பல அரிய செல் வங்களைத் தமிழன்னை இழந்திருப்பாள்.

மனோன்மணீயம் சுந்தரனாரின் மற்றோர் அரிய படைப்பு 'நூற் றொகை விளக்கம்' என்னும் அரிய அறிவியல் நூலாகும். உலகி

லுள்ள அறிவுக் கலைகளைப் பகுத்துக் கூறும் இந் நூலைத் தமிழில் வெளிவந்த முதல் நூலகவியல் நூல் என்றும் இதனைக் கழகம் மறுபதிப்பு செய்தபோது நூலகவியல் பேரறிஞர் முனைவர் சீ. ரா. அரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதியது:

"எனக்கும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்கும் இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் முதல் தொடர்பு ஏற்பட்டது. கழகத்தின் 190 ஆவது வெளியீடே இத் தொடர்பை ஏற்படுத்தியது. ஹர்பாட் ஸ்பென்ஸர் அமைத்துள்ள அறிவு உலக வகுப்பு முறையை, பி. சுந்தரம் பிள்ளை தமிழில் எழுதி வெளியிட்டதே அவ் வெளியீடு. 1888இல் அது முதன்முறை ஆசிரியராலேயே வெளியிடப்பட்டது. ஆனால் அது நெடுநாட்களாகக் கிடைக்கப் பெருமல் இருந்தது. 1936இல் கழகம் அதன் வெளியீட்டு வரிசையில் அந் நூலை வெளியிட்டது. அதே ஆண்டில் நூல் உலக வகுப்பு இயல்பற்றிய நூலொன்றை எழுதுவதில் நான் முனைந்திருந்தேன். ஆகையால், வகுப்பு முறையைப்பற்றி அறிவித்த எந்தக் கொள்கையையும் அறிந்துகொள்வதில் என் உள்ளம் அந்தச் சமயத்தில் விழிப்புற்றிருந்தது. இப் பொருளைப்பற்றிச் சுந்தரம் பிள்ளை அந் நூலில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் என் பாராட்டுக்களைப் பெற்றன. இப் பாராட்டுக்கள் என்னைக் கழக ஆட்சிப் பொறுப்பாளரான திரு. வ. சுப்பையா பிள்ளையுடன் தொடர்புண்டாக்கின."

இவ்வாறு நூலகப் பேறிஞர் போற்றும் வகையில் சுந்தரனாரின் நூற்றொகை விளக்கத்தை வெளியிட்டது கழகம். 1957இல் சுந்தரனாருக்குச் சென்னையில் பேரறிஞர்கள் ஒத்துழைப்புடன் மிகப் பெரிய நினைவு விழாவை இராசாசி மண்டபத்தில் கழகம் நடத்தியதோடு அதனையொட்டி அரிய கட்டுரைகள் கொண்ட மலர் ஒன்றையும் வெளியிட்டது. இவ்வாறு மனோன்மணீயம் சுந்தரனாரின் புகழ் பரவ அவ்வப்போது உரிய பணிகள் பலவற்றைக் கழகம் ஆற்றியுள்ளது.

தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளார்தம் நன்முயற்சிகளுக்கெல்லாம், கழகத்தைத் தோற்றுவித்து, அதன் அமைச்சராகப் பணியாற்றிய அண்ணல் திருவரங்கனார் அவர்கள் கழகந் தொடங்குமுன் இலங்கையில் பணியாற்றிவந்த நாள் தொட்டுப் பல்லாற்றானும் உறுதுணை நின்றுள்ளனர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அடிகளார்தம் நெறிமுறைகளைக் கடைப்பிடித்துச் சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் பணியாற்றுதற்கென்றே அமைந்த நிறுவனமாகும். 'செந்தமிழ்ச் செல்வி'

அடிகளார்தம் கருத்துக்களையும் புகழையும் பரப்பும் அருங்கருவி யாகத் திகழ்கின்றது.

மறைமலையடிகளார் மறைவிற்குப்பின் அவர்கள் விருப்ப ஆவணத்தின்படி கழகம் அடிகளார் நூல்கள் அனைத்தையும் பொலி வாகவும் தனித்தன்மை விளங்குமாறும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. அடிகளார் மணிமொழி நூல்நிலையம் கழகத்தின் நன்முயற்சியால் சென்னை இலிங்கிச் செட்டித்தெருவில் மறைமலை யடிகள் நூல் நிலையமாகப் பெருகி வளர்ந்து வெளிநாட்டு, உள் நாட்டுப் பேரறிஞர் பெருமக்களெல்லாம் பாராட்டுமாறும், ஆராய்ச்சி யாளர்க்கு அரிய கருவூலமாகவும் பீடுற விளங்குகின்றது; பல்லா வரத்தில் அடிகளார் வாழ்ந்த பொதுநிலைக்கழக வளமனை மறைமலை யடிகள் கலைமன்றமாக நிலைபெற்று விளங்குகின்றது.

அடிகளார் நூல்களை வெளியிட்டுவருவது மட்டுமன்றி அவர்க ளுடைய ஆராய்ச்சி முடிவுகளுக்கு அரண்சேர்க்கும் வகையிலும்கழகம் பலப்பல நூல்களை வெளியிட்டுவருகின்றது; செந்தமிழ்ச் செல்வியை நடத்திவருகின்றது. மக்கட்பெயர் ஊர்ப்பெயர் முதலியனவெல் லாம் தனிச் செந்தமிழ்ப் பெயர்களாக விளங்கவேண்டுமென்னும் கொள்கையில் கழக ஆட்சியாளர் அவர்கள் மிகுந்த ஆர்வமுடைய ராய்ப் பணியாற்றி வருகின்றனர். கடந்த ஈராண்டுகட்குமுன் மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவைக் கழகம் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்வாண்டு மறைமலையடிகள் நூல்நிலையத்தின் இருபானுண்டு நிறைவுவிழா சிறப்புறக் கொண்டாடப்படவிருக் கின்றது. இவ்வாற்ருல் அடிகளார் நூல்களும் கருத்தும் புகழும் பரவுதற்கும் நிலைபெறுதற்கும் கழகம் பல்லாற்ருனும் ஓவாது பணி யாற்றிவருகின்றது.

பல்கலைப் புலவர் பேராசிரியர் **கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள் இயற்கையிலேயே நுண்ணறிவும், ஆங்கிலத்திலும் செந் தமிழிலும் பரந்துபட்ட பயிற்சியும், சட்டத்துறையில் ஆழ்ந்த பேரறிவும், மற்றும் பல்துறைகளிலும் ஈடுபாடும், ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவர். இவர்கள் இளங்கலை (பி. ஏ.) பயின்று முடித்த நிலையிலேயே இவர்தம் தமிழ் ஆங்கிலப் புலமை நலத்தை வியந்து, தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தகுதி வாய்ந்தவர் இவரே என்று சுட்டிக்காட்டித் திரு. பொன்னம் பலம் பிள்ளையவர்கள் மாட்சிமை தங்கிய பரோடா மன்னர் அவர் களுக்கு எழுதிய கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார்கள். அக் காலத்தில் சுப்பிரமணிய பிள்ளையர்வர்கள் சட்ட முதுவர் (எம். எல்.) பட்டம் அளிக்கப்பட்டமையால் எம். எல். பிள்ளை என்றே இவரைப் பலரும் வழங்குவாராயினர். அரிய சட்ட நுணுக்கங்களை விளக்கி எழுதி விரிவுரை செய்தமையால் பலரும் பெறுதற்கரிய

பத்தாயிரம் உருவா சிறப்புப்பரிசு பெற்றனர்; 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றனர்.

கா. சு. பிள்ளை அவர்கள் எழுதிய சட்ட விளக்க ஆங்கில நூல் வெளிவருதற்குக் கழக ஆட்சியாளர் அற்றைநாளிலேயே பெருமுயற்சியெடுத்துக் கொண்டனர். சென்னையில் சட்டக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் இருமுறையும் முறையே பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் விளங்கிய சுப்பிரமணியனார் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய நூல்கள் பலப்பல.

பேராசிரியர் அவர்களின் பெரும்பாலான நூல்கள் கழகப் பதிப்பாக வெளிவந்துள்ளன. கழகம் வெளியிடும் வாய்ப்பைப் பெருவிடின் அந் நூல்கள் தொடர்ந்து வெளியிடப்படாமல் தட்டுப்பாடான நிலை எய்தியிருக்கும்.

கா. சு. பிள்ளை அவர்கள் காலமான பின்னர், அவர்கள் பிறந்து வளர்ந்த உரிமையூரான திருநெல்வேலியில் கழகம் நடுகல் நிறுவியுள்ளது. அதன்கண் பேராசிரியரின் பீடும் பெருமையும் வரையப்பட்டுள்ளன.

இணையற்ற பேரறிஞரான சுப்பிரமணியனார் அவர்கள் பெயர் விளங்கவும் புகழ் நிலைக்கவும் கழகமே முயற்சி எடுத்துக்கொண்டது. அவர்கள் பெயரில் கழகம் ஓர் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியது. (கா. சு. பிள்ளை தமிழாராய்ச்சி மன்றம்) அரசின் பொருளுதவி கிட்டாமையாலும், கழகத்தின் வருவாய் இடந்தராமையாலும் இம் மன்றத்தைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. ஆயினும் கா. சு.வின் பணி சிறக்கவும் புகழ் நிலைக்கவும் கழகம் ஒல்லும் வகையான் என்றும் பணியாற்றிக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொறியியல் வல்லுநரும் மொழிநூல் அறிஞருமான **பா. வே. மாணிக்கநாயக்கர்** அவர்கள் இயற்கையிலேயே கூர்த்த அறிவு வாய்ந்த திருவினருள் ஒருவராவர். பொருள்வளமற்ற எளிய குடும்பத்தில் பிறந்த இவர் மேற்படிப்பு படிக்க முடியாத நிலையில் இருந்தனர். இவர்தம் அறிவாற்றலைக் கண்டு வியந்த **முனுசாமி நாயுடு** என்னும் துறவியார், தம் துறவு நிலையையும் பாராது ஒரு நிறுவனத்தில் பணியாற்றி, அதினின்றும் கிட்டிய வருவாயைக் கொண்டு இவரைக் கல்வி பயிலச் செய்தனர். இந் நிகழ்ச்சியே இவர்தம் நுண்ணறிவை விளக்கப் போதுமானதாகும்.

திரு பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்கட்கும், கழகத்திற்கும் உள்ள தொடர்பையும், இவர்தம் பணிச் சிறப்புக்கும் புகழ் நிலைக்கும் கழகம் மேற்கொண்ட முயற்சிகளையும் இப் பெருமகனார் போல மற்றும் பலருடைய நிலைகளையும் அடுத்த இதழில் காண்போம்.

தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

16 பள்ளி

புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளை, துளை, உட்டுளையுள்ள நிலத்திணை வகை.

புல்—புள்—புழு. புழுத்தல் = புழுத்துளைத்தல்.

புல்—பொல். பொல்லுதல் = துளைத்தல். பொல்லம் பொத்துதல் = நார்ப் பெட்டியின் ஓட்டையடைத்தல். பொல்லாமணி = துளையில்லாமணி. பொல்லாப் பிள்ளையார் = உளியிடாப் பிள்ளையார் படிமை.

பொல்—பொள். பொள்ளுதல் = துளைத்தல். பொள்ளல் = துளை, ஓட்டை.

"ஏதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு" (நன்னெறி, 12)

புள்—பள்—பள்கு. பள்குதல் = பதுங்குதல், பள்ளமான இடத்தில் மறைதல். பள்கு—பழ்கு.

பள்—பள்ளம் = 1. தாழ்விடம். 2. தாழ்நிலம். 3. தாழ்மட்டம், தாழ்வு. 4. குழிவு. 5. கன்னத்தில் விழுங்குழிவு. 6. ஆழம். 7. கிடங்கு. 8. குழி.

துளைத்தல் தோண்டுதல். தோண்டும் நிலம் முதலிற் பள்ளமாகும்; பின்பு கிடங்காகும்; அதன்பின் குழியாகும்; குழி ஒன்றை ஊடுருவின் துளையாகும். தோண்டத் தோண்ட ஆழம் மிகும்.

பள்—பள்ளி. பள்ளிக் கிருத்தல் = விதைகள் சேற்றிற் பதிந்து கிடத்தல். (நாஞ்சில் நாட்டு வழக்கு).

பள்—பள்ளை = குள்ளம். பள்ளையன் = குள்ளன், குறுகிப் பருத்தவன். பள்ளையாடு = குள்ளமான ஆட்டுவகை.

குள்ளம் பள்ளம்போல் தாழ்மட்டமாயிருத்தலால், பள்ளையெனப்பட்டது.

பள்ளை—பள்ளையம்=தாழ் மட்டமான (தட்டையான) உண் கலம். ம. பள்ளையம்.

பள்ளையம் போடுதல்=சிறு தெய்வத்திற்குக் கீழே படைத்தல்.

பள்ளி=1. தாழ்வு. 2. தாழ்வான இடம், தாழ் மட்டம். 3. தாழ்வான வீடு அல்லது குடிசை. 4. தாழ்வான வீடுகள் சேர்ந்த சிற்றூர். 5. தாழ்வான இடைச்சேரி. "காவும் பள்ளியும்" (மலைபடு. 451) ஒ. நோ: படு—பாடு—பாடி=இடைச்சேரி. படுத்தல்=தாழ்வாயிருத்தல். 6. நெடிதாய் எழுந்து நிற்கும் நிலையும் குறிதாய் அமர்ந்திருக்கும் நிலையும் இன்றித் தாழ்வாய் நில அல்லது அடித்தள மட்டமாய் நீளக்கிடக்கும் நிலை. 7. அங்ஙனங் கிடத்தல், படுத்தல். 8. படுக்கும் இடம், விலங்கு துயிலிடம். 9. படுக்கும் பாயல், பரப்பல், விரிப்பு, மெத்தை. 10. படுத்துத் தூங்குதல், தூக்கம். 11. படுக்கும் அறை. 12. படுத்துத் தங்கும் வீடு, வீடு. (மடைப்பள்ளி=சமையல் செய்யும் தனி வீடு). 13. அரசன் வீடாகிய அரண்மனை. 14. தெய்வ வீடாகிய திருக்கோவில். "கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்" (குறள். 840); சமணக்கோயில், புத்தக்கோயில். 15. துறவியர் தங்கும் மடம். 16. முனிவரிருக்கை. 17. அறச்சாலை. 18. தங்கும் இடம். 19. இடம். "சொல்லிய பள்ளி நிலையின வாயினும்" (தொல். எழுத். 100). 20. கோவிலில் அல்லது மடத்தில் நடைபெறும் துவக்கக் கல்விச்சாலை. 21. பணிமனை. "தச்சன் வினைபடு பள்ளி" (களவழி. 15). 22. பல வீடுகள் சேர்ந்த பேரூர், பல காரை வீடுகள் சேர்ந்த நகர் அல்லது நகரம். 23. ஊர்ப் பெயரீறு. எ - டு: குராப்பள்ளி, திருக்காட்டுப் பள்ளி. தெ. பல்லி (b.), மதனபல்லி, பங்கனப்பல்லி. க. பள்ளி, ஹள்ளி, மாரண்டஹள்ளி. பழங்கன்னடத்தில் பள்ளி யென்று வழங்கிய ஊர்ப்பெயர் ஈறுகளெல்லாம், புதுக் (ஹொச) கன்னடத்தில் ஹள்ளி என்று மாறிவிட்டன.

பள்ளி—வ. பல்லீ, பல்லி (கதாசரித்சாகர)=சிறு வீடு, சிற்றூர்.

பல்லி என்னும் வடசொல் வேதத்தில் வழங்காது பிற்காலச் சமற்கிருதத்திலேயே வழங்குதலும் பகரமுதல் எடுப்பொலி பெருமையும், வேர்ச்சொல் இன்மையும், வேறு பொருள் கொள்ளாமையும், அது தமிழ்த் திரிசொல் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டும். ஆயினும், அதைத் தமிழ்ச்சொற்கு மூலமென்று சென்னைப் ப. க. தமிழ் அகரமுதலி தொகுத்தோர் துணிச்சலுடன் காட்டியிருப்பதும், இன்றும் தமிழ்ப் பேராசிரியரும் அதை உணராதிருப்பதும், உணர்த்தினும் சிறிதுஞ் செவிக்கொளாதிருப்பதும், இற்றைத்

தமிழன் தன் உயர்திணைத் தன்மையை அல்லது நெஞ்சுரத்தை முற்றும் இழந்துவிட்டானோ என்று ஐயுற்று வருந்தச் செய்கின்றன.

பள்ளிக் குறிப்பு, பள்ளி கொண்டான், பள்ளி கொள்ளுதல், பள்ளி மண்டபம், பள்ளி மாடம், பள்ளியந்துலா, பள்ளியம்பலம், பள்ளியயர்தல், பள்ளியறை, பள்ளியெழுச்சி என்பன படுக்கை அல்லது தூக்கம் பற்றிய வழக்குச் சொற்கள்.

பள்ளி படுத்தல், பள்ளிபடை என்பன அரசரையும் முனிவரையும் அடக்கஞ் செய்தல் பற்றிய வழக்குச் சொற்கள். அடக்கஞ் செய்தல் நிலையாகப் படுக்கைப் படுத்துதல் போன்றது.

பள்ளி கம்பு வைத்தல் என்பது, வரி செலுத்தாதவன் வீட்டின் முன் கம்பு நட்டு மறியல் செய்யும் நாஞ்சில் நாட்டு வழக்குப்பற்றிய சொல். பள்ளியோடம் என்பது சிறு வீடு போன்ற அமைப்புள்ள மரக்கலம்.

பள்ளிக்கட்டில், பள்ளிக்கட்டு, பள்ளித்தேவாரம், பள்ளிப் பீடம், பள்ளிவேட்டை என்பன, அரண்மனை அல்லது அரசன் தொடர்பான வழக்குச் சொற்கள்.

பள்ளிச்சந்தம் என்பது சமண புத்தக்கோவில் மானியமும் பள்ளிவாசல் என்பது மகமதியர் கோவிலும் பற்றிய வழக்குச் சொற்கள்.

பள்ளிக் கணக்கன், பள்ளிக் கணக்கு, பள்ளிக்கு வைத்தல், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தான், பள்ளித்தோழமை, பள்ளிப் பிள்ளை, அரைப்பள்ளி, உச்சிப்பள்ளி என்பன, திண்ணைப் பள்ளிக் கூடம் அல்லது துவக்கக் கல்விச்சாலை பற்றிய வழக்குச் சொற்கள்.

இனி, வேறு சில வழக்குச் சொற்களும் உள.

இத்தகைய வழக்குச் சொற்கள் வடமொழியில் இல்லை.

பள்—படு—படுக்கை, படை. ஒ. நோ: Goth. *badi*, OE. bed, OS. bedi(d) E. bed. படு—பாடு—பாடி, பாடை. படு—படி, படிதல். ஒ. நோ: OE, OS. bidan, Goth, beidan, E. bide.

பள்—பாள்—பாளம்=1. பரந்து தட்டையான கட்டி. 2. கனத்த தகடு.

பள்ளி—(பாளி)—பாழி=1. மக்கள் துயிலிடம். "பெரும்பாழி சூழ்ந்த விடத்தரவை" (திவ். இயற். 1 : 80). 2. விலங்கு துயிலிடம். (பிங்.) 3. குகை. (திவா.) 4. கோயில். "ஐயன் பாழியில் ஆனைபோர்க் குரித்தாம் அன்று" (ஈடு, 1 : 1 : 3). 5. பாசறை. (பிங்.) 6. முனிவரிருக்கை. "பூதந்தம்பாற் பாட்டிக் கொண் டுண்பவர் பாழிதொறும்" (தேவா. 186 : 5). 7. வதியும் இடம், இடம். "வானவர்கோன் பாழி" (திவ். இயற். 2 : 13). 8. மருத நிலத்தூர். (சூடா.) 9. நகரம். (பிங்.) 10. சிறுகுளம். (தொல். சொல். 400, உரை). 11. இறங்கு துறை. "இவர் தம்மைத் தானுணர்ந்தால் இவர்க்குப் பாழி கிருஷ்ணவதார மிறே" (திவ். இயற். திருவிருத். 61). 12. எலிவளை, எலிப்பாழி.

இனி, பாள்—பாளி—பாழி என்றுமாம்.

பாள்—பாளை—பாளையம்=1. பாசறை. 2. போர்க்குச் செல்லும் படை வழியில் தங்கியிருக்கும் இடம். 3. படை நிலையாக இருக்கும் ஊர்.

பாழி=Gk. *polis*, city.

E. acropolis (f. Gk. *akropolis*, *akros*, topmost, outermost, *polis*, city), citadel or elevated part of a Greek city, esp of Athens.

E. decapolis (f. Gk. *deka*, ten, *polis*, city), confederacy of ten cities in the Ist century B. C. in a region in the NE part of ancieat Palestine.

E. necropolis (f. Gk. *nekros*, corpse, dead body, *polis*, city), cemetery.

E. cosmopolis (f. Gk. *kosmos*, universe, *polis*, city), a cosmopolitan city.

E. cosmopolitan, a. Belonging to all parts of the world; n. person free from national limitations.

E cosmopolite, n. Citizen of the world; a. free from national prejudices; Gk. *kosmopolites*, *kosmos*, universe, *polites*, citizen.

E. cosmopolitical, a. Belonging to universal polity.

E. metropolis, n. Chief city of a country, capital, metropolitan bishop's see, centre of activity. [LL. f. Gk. *metropolis*, *meter*, mother, *polis*, city.]

E. metropolitan, a & n. Of a or the metropolis; belonging to, forming part of, mother country as dist. from its colonies; of an ecclesiastical metropolis; metropolitan bishop; bishop having anthority over bishops of a province, in the west equivalent to archbishop, in Greek church ranking above archbishop and below patriarch, whence metropolitanate; inhabitant of a metropolis.

[LL. *metropolitanus* f. Gk. *metropolites* f. *metropolis*.

E. **Metropolitan magistrate** paid London magistrate.

E. **police**, n. Civil administration, department of government concerned with public order, civil force responsible for enforcing law and maintaining public order. [F. f. med. L. *politia*, policy.]

E. policlinic, n. Clinic in private houses; f. G. *poliklinik* f. Gk. *polis*, city+clinic.

E. **policy**, n. Statecraft, course of action adopted by government, party, etc; political sagacity, prudent conduct. [ME f. OF. *policie* f. L. f. Gk. *politeia*, citizenship, polity, *polites*, citizen f *polis*, city.

E. politarch, n Governor of some Oriental cities, e. g. Thessalonica under Romans. [f. Gk. *politarkhes*, *polites*, citizen, *arkhes*, ruler.]

E. **politic**, a & n. (Of persons) sagacious, prudent, (of actions etc.) judicious, expedient, Scheming; n. (pl.) Science and art of government, political offairs or life, political principles. [ME. L. OF. politique f. L. f. Gk. *politikos*, f. *politea* f. *polites* f. *polis*, city.

E. political, a. & n Of the State or its government, of public affairs, of politics; f. *politic*.

E. **politician**, n. One skilled in politics, statesman, one interested or engaged in politics, esp. as profession, one who makes a trade of politics; f. *politic*.

E. politicize, ise, v. i. & t. Act the politician; engage in, talk, polities; give political character to; f. politic+ize (suf.)

E. politico—, in comb. as politico—economical, politico—geographical, politico—social, politico—religious etc.; f. politic.

E. **polity**, n. Condition of civil order; form, process, of civil government; organized society, state. [f. obs. F. *politic* or L. *politia*, policy.

'ஊர் காவல்', 'பாடி காவல்' என்பன போன்றே, police என்னும் காவல் துறைப் பெயரும் நகரப் பெயரினின்று தோன்றி யிருத்தலை நோக்குக.

———

கட்டுக் கதைகளால் வருங்கேடு

பிறமொழிக் கட்டுக் கதைகளை ஆக்கிய புலவர்கள் அவற்றைக் கட்டுக்கதைகளென்றே கூறுதலோடு, அவற்றைப் பயில்வாரும் அவை பொய்யெனவே யுணர்ந்து அவையிற்றை அயர்வு தீர்ந்து இன்புறுதற் கருவியாகவே கைக்கொண்டு பயில்கின்றனர். அதனால் அந் நூல்களைப் பயிறவில் தீங்கேதும் விளைவதில்லை. மற்றுப், பிற்காலத்துத் தமிழ்ப் புலவர்களோ வடமொழிக் கட்டுக்கதைகளை ஆராய்ந்து அவற்றுட் பொய் யாவன இவையென்று தெளியும் பகுத்தறிவில்லாதவர்களாய்ப் பொய்யை மெய்யாக நம்பித் தாம் அறிவு மழுங்குவதோடு, அப் பொய்யை மெய்யாகப் பிறரும் நம்புமாறு காட்டி அவர தறிவையும் மழுக்குவதால் இவரால் தமிழுக்குந் தமிழ் மக்கட்கும் உண்டாங்கேடு அந்தோ! பெரிது! பெரிது!

—மறைமலையடிகள்

(முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக். கடுஅ)

தொல்காப்பியம் கூறும் அறநெறி

[டாக்டர் சோ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.]

1.0. தொல்காப்பியத்தை எழுத்திலக்கணம் கற்கவும், சொல்லிலக்கணம் கற்கவும் மட்டுமே கொள்ளும் வழக்குத் தமிழகத்தில் இருந்து வருகின்றது. அது வாழ்விலக்கணமும் படிப்பிக்கும் உயர் நெறிப்பனுவல் என்று நோக்குதல் பெரிதும் குறைந்துள்ளது. இந் நிலை மாறுதல் வேண்டும். 'நன்னெறிக் குறிப்புக்கள் பலவற்றையும் நல்குவது தொல்காப்பியம்; அது காட்டும் அறநெறிக் குறிப்புக்களை மேற்கொண்டு உயர்தல் வேண்டும்' என்ற சிந்தனையை அழுத்தமாகத் தமிழ்மக்கள் நெஞ்சிடைப் பதிப்பதே இக் கட்டுரைக் குறிக்கோள்.

1.1. தொல்காப்பியத்தின் மூன்றும் பகுதியாகிய பொருளதிகாரம் மட்டுமே வாழ்வியல் பேசுகின்றது. எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்ற மெய்ம்மையினை எடுத்துரைக்கின்றது. எனவே, பொருளதிகாரத்தை 'வாழ்விலக்கணம்' என்று மாற்றிக் கூறுதலும் பொருந்தும். அகத்திணை என்ற தலைப்பில் அன்பு வாழ்வின் அடிப்படைக் கூறுகளை ஆராய்கின்ற தொல்காப்பியர், அங்குக் கூருதொழிந்த சில உண்மைகளைப் 'பொருளியல்' என்ற பகுதியிலும் நவில்கின்ருர். புற வாழ்வுக் கூறுகளை எடுத்துக் கூறும் பகுதி 'புறத்திணையியலாக' அமைகின்றது. 'களவு' 'கற்பு' இயல்கள் அன்பு வாழ்வின் நுணுக்கங்களை நுவலும் பகுதிகள். 'செய்யுள் இயல்' என்பது வாழ்வோடு தொடர்பில்லாத செய்திகள் அடங்கியது என்று மேம்போக்காக எண்ணத் தோன்றும். நுட்பமாகச் சிந்தித்தால் வாழ்வுக்கும் செய்யுளுக்கும் உள்ள தொடர்பு விளங்குவதாகும். வாழ்விலிருந்து விளங்கி மலர்வதன்ருே கவிதை அல்லது செய்யுள்! வாழ்வினின்று மலர்ந்து வாழ்விற்கே வழிகாட்டும் பெற்றி உடைய 'செய்யுள்' இலக்கணத்தை ஆசிரியர் பொருளதிகாரத்தே அமைத்துள்ளமை, அவரது 'அஃகி அகன்ற அறிவின்' மாட்சியையே காட்டுவதாக உள்ளது.[1] இவ்வாறே 'மெய்ப்பாடு' கூறும் பகுதி வாழ்வின் உணர்வுக் கூறுகளை (emotional elements) ஆராய்வதாக உள்ளது. அதனைச் சிந்தித்திருக்கும் பாங்கும் அமைத்திருக்கும் அழகும் எண்ணுதற்குரியன.

---

1. திருக்குறள்—புறங்கூருமை - குறள் 5

அணிநலம் பேசும் உவம இயல் வாழ்வில் அழகுபடப் பேசும் பெற்றி வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவே எனலாம். இவ்வாறே இறுதிக்கண் அமைந்த, 'மரபு வாழ்வில்' 'மரபை மறத்தல் மாந்தன் கடன் அன்று' என்று தெளிவுறுத்துவதற் காகவே அமைக்கப்பட்டது என்று கூறுவது பொருந்தும். 'மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும்' என்று ஆசிரியர் கூறுவது செய்யுள் மரபிற்கு மட்டுமே என்று கருதுவது கூடாது.[2] மரபு காத்தல் எல்லோர்க்கும் வேண்டும். பயன்படக் கூடிய மரபுகளைப் பேணுதல் இன்றியமையாத ஒன்றாகும்.

1.2. மனிதன் அறத்தை மறந்தால் அவனுக்கு உய்வு இல்லை. அறம் மனிதனின் மூச்சுப் போன்றது. 'செயற்பாலது ஓரும் அறனே' என்று வள்ளுவமும் இதனையே வற்புறுத்திச் செய்யத் தூண்டுகின்றது.[3] இந்த அறநெறி பிறழாத வாழ்வாக ஒருவன் தன் வாழ்வை அமைத்துக்கொண்டு பிறர் போற்ற வாழ்வதும், பிறர் தூற்ற அதனைப் புறக்கணித்து வாழ்வதும் உலகத்திற் காணக் கூடியவையே. ஆனால், அறிவு ஒழுக்கம் உடைய நல்லோர், சான்றோர் ஒழுகலாறுகளை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்தலே மனிதனுக்குத் தேவையான சீரிய கடன் ஆகும். இதனைத் தொல் காப்பியர் பல்வேறிடங்களில் வற்புறுத்தியுள்ளனர்; சிலவற்றை இங்குக் காட்டல் பொருந்தும் :

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாகலான"[4]

"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே"[5]

"அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[6]

"பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து"[7]

"தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு"[8]

---

2. தொல்—மரபு - 93
3. திருக்குறள்—அறன்வலியுறுத்தல் - குறள் 10
4. தொல்—மரபு - 97
5. மேற்படி—பொருளியல் - 21
6. மேற்படி—கற்பியல் - 51
7. மேற்படி—கற்பியல் - 9
8. மேற்படி—களவியல் - 23

"மையறு சிறப்பின் உயர்ந்தோர்"[9]

"ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[10]

"பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன்எனச் செவியுறுத் தற்றே"[11]

"நுகள்தபு சிறப்பிற் சான்றோர்"[12]

ஒழுக்கம் உடைய நல்லோரைக் காட்டாகக் கொண்டு அவர் கூறும் மெய்ந்நெறி வழியே வாழ்வை நடத்துதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் திருவுள்ளம் ஆதலை இங்குக் காட்டப்பட்ட எடுத்துக் காட்டுக்கள் இனிது புலப்படுத்தும்.

2.1. அறநெறி வாழ்விற்கு இன்றியமையாத தேவை கடவுள் உணர்ச்சி. "கடவுள் ஒருவர் உண்டு; அவர் ஒழுக்கநெறி நிற்றலே உலகிடை வாழ்வோர் செய்யலாவது" என்பதை ஆசிரியர் வற் புறுத்தியுள்ளார். கருப்பொருட் பகுதிகளை எடுத்துரைக்குமவர் "தெய்வம் உணாவே" என்று தெய்வத்திற்கே முதல் இடம் தந்துள் ளார்.[13] அதுமட்டுமின்றி மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய கடவுளர் வழிபாட்டை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களொடு சார்த்தி நவின்றுள்ளார்.[14] மெய்ப் பாட்டியலில், "தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்" என்ற தொடரால் தெய்வம் அஞ்சி வாழுதலே தெளிவான அறம் பேணத் தக்க அடிப்படை என்று புலப்படுத்தியுள்ளார்.[15] முதனூல் எது என்று விளக்கும்போது, "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்று விளக்கியுள்ளார்.[16] இவையனைத்தையும் ஒரு சேர நோக்கும்போது புலனாவது யாது? 'தெய்வக் கொள்கை' ஆசி ரியரால் இனிது உணர்த்தப் படுகின்றது என்பதே அன்றோ?

2.2. உள்ளுறை 'தெய்வம்' ஒழிந்த ஏனைய கருப்பொருட் சார்புடையது என்பதும்,[17] 'கொடிநிலை', 'கந்தழி', 'வள்ளி'

---

9. மேற்படி—களவியல் - 27

10. மேற்படி—கற்பியல் - 4

11. மேற்படி—செய்யுளியல் - 110

12. மேற்படி—புறத்திணையியல் - 75

13. மேற்படி—அகத்திணையியல் - 20

14. மேற்படி—அகத்திணையியல் - 5

15. மேற்படி—மெய்ப்பாட்டியல் -

16. மேற்படி—மரபியல் -

17. மேற்படி—புறத்திணையியல் - 50

ஆகிய மூன்றும் 'வடுநீங்கு சிறப்பினை உடையவையாய்க் கடவுள் வாழ்த்தொடு கண்ணி' வரும் என்பதும்'[8] ஆசிரியர் அறிவுறுத்தும் மெய்ம்மைகள். ஏதேனும் ஒரு தெய்வக் கொள்கையைக் கொள்ள வேண்டும் என்று விளக்குவது 'ஒரு தெய்வக் கோட்பாடே' (mono theism) தொல்காப்பியருடையது என விளங்கிக் கொள்வதற்கு உறுதுணையாகும். அவ்வினிய நூற்பாவில் வருவது :

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''

இந் நூற்பா வழிகாட்டும் வான்குறிப்புப் பொதுவியது என்பது வெளிப்படை.

3.1. அன்பொடு கூடிய ஐந்திணைக்கு அறம் எத்துணை இன்றியமையாதது என்பதனை ஆசிரியர் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் எண்ணற்ற இடங்களில் விளக்குவாராயினும்,

''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை''

என்ற நூற்பாப் பகுதி இதனை விளக்குவதாக அமைந்துள்ளமை கருதத்தக்கது.[20]

3.2. நற்பண்புகள் சான்ற ஆண்மையையும் பெண்மையையுமே (Ideal manhood and Ideal womanhood) தலைவன், தலைவி என்று தொல்காப்பியர் குறித்துள்ளார். தலைமக்கட்கு இன்றியமையாப் பண்புகளைத் தம் நூற்பாவில் மொழிந்துள்ளார். கீழ்வரும் இரண்டு நூற்பாக்களை இந்த அடிப்படையில் நோக்கலாம்:

''பெருமையும் உரனும் ஆடூஉ மேன''[21]
''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப''[22]

பெருமைக்குரிய நல்லியல்புகளும், கூரிய அறிவும் (உரனும்) உடையவனாகத் தலைவன் விளங்குதல் வேண்டும்; அஞ்ச வேண்டுவன

---

18. மேற்படி—புறத்திணையியல் - 55
19. மேற்படி—செய்யுளியல் - 106
20. மேற்படி—களவியல் - 1
21. மேற்படி—களவியல் - 7
22. மேற்படி—களவியல் - 8

வற்றிற்கு அஞ்சும் அச்சமும், நாணமும், மடனும் உடையவளாகத் தலைவி விளங்குதல் வேண்டும். தலைவன், தலைவி நடந்து கொள்ளத்தக்க முறைகளைப் பற்றி இக் கால அறிவியல் நெறியை யொட்டிப் பல்வேறு நூற்பாக்களைப் படைத்துள்ளார் தொல்காப்பியர்.

3.3. இல்வாழ்க்கையில், தலைவி தன்னைப் புகழ்ந்து பேசும் மொழிகளாகத் தலைவன் முன்னே எதனையும் பேசக்கூடாது என்பார் ஓர் இடத்து[23] தலைவன் தன் கடமையை ஆற்றிக்கொண்டிருக்கும் போது தன் துணைவியை எண்ணுதல் கூடாது என்பார் பிறி தோரிடத்தில்,[24] தோழி தலைமகனின் இயல்புகளைப் பழித்துரை யாடுவது போன்ற பேச்சு அவனைத் திருத்துவதற்காகக் கொள்ளப் பெறுதல் வேண்டும் என்று கூறி அதற்குச் 'செங்கடுமொழி' எனப் பெயரிட்டுப் போற்றுவார் மற்றொரு நூற்பாவில்.[25] பரத்தையிற் பிரிதல் ஆகாத—கருவயிற்றுறூஉம் காலம் இன்னது என்று தெளிவுறுத்துவார் ஒரு நூற்பாவில்.[26] உள்ளப் புணர்ச்சியே வேண்டும் என்று வற்புறுத்துபவர் மெய்யுறு புணர்ச்சிக்கு முன்பாக எத்தகைய உறுதிநிலை காதலர்க்கு இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவார் மற்றோரிடத்தில்.[27]

3.4. மனைவி கணவன் பேச்சிற்கெல்லாம் தலையாட்டும் பாவையாக இருத்தல் கூடாது; அவளுக்கென்று தனிச் சிந்தனையும் செயற்றிறனும் வேண்டும்; அவள் கணவனைத் 'தாய்' போன்று கழறி உரைத்துத் தழுவிக்கொள்ளக் கூடியவளாக இருக்க வேண்டும் என்று கூறும் அரியபொருள் அமைந்த நூற்பா மறக்க வியலாதது.[28]

"தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான"

இக் கருத்தை மற்றோரிடத்து வெளிப்படுத்துவதும் உண்டு: "தாய் போற் கழறித் தழீஇய மனைவி" என்று.[29] (தொடரும்)

---

23. மேற்படி—களவியல் - 28
24. மேற்படி—கற்பியல் - 45
25. மேற்படி—களவியல் - 24 ["கொடிய கடுமொழியே யன்றி மனத்தினுள் இனியளாகிக் கூறும் கடுமொழி"—இளம்பூரணர்]
26. மேற்படி—
27. மேற்படி—களவியல் - 9
28. மேற்படி—கற்பியல் - 32
29. மேற்படி—கற்பியல் - 10

ஞானசம்பந்தரும் தாளமரபும்

[பாவலர் வீ. ப. கா. சுந்தரம்
பேராசிரியர் அரசரடி மதுரை.]

தாளம் என்ற சொல்லின் பொருள் என்ன? தாளம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது? தாளக் கருவிகளின் வகையும் வடிவும் என்ன? சங்க காலத்தின் இலக்கியங்கள் குறித்த தாளங்கள் எவை? இவ் வினக்கட்கு விடை காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

"தாளம்"—சொற்பொருள்:

'தா' என்றால் சிவன்; 'ள'—சக்தி; சிவசக்திக் கூட்டுறவே தாளம். (தாளமும் அனுபவமும்—ப. வைத்தியலிங்கம் பிள்ளை இயற்றியது பக். 12). இது கற்பனை விளக்கம்; தத்துவ விளக்கம்; இதனைச் சொற்பொருள் விளக்கமாகக் கொள்ள இயலாது. இனி, வேறொரு விளக்கம்; — சிவநடனத்தின்போது — காற்சிலம்பு கழன்று, சிவன் தோளில் மோதித் 'தா' எனும் ஒலியை உண்டாக்கியது; பின் அச் சிலம்பு 'ளம்'—எனும் ஒலியுடன் கீழே விழுந்தது. 'தா+ளம்=தாளம்' என்றாயது. இதுவும் புராண விளக்கமே. இனிச் சொற்பொருள் விளக்கம் காண்போம்:—

தளம்—அடிப்படை; தாள்—அடிப்பாகம்; 'பயிரின் தாள், ஒருவரின் நடக்கும் தாள்'—எனும் போது—அடிப்பாகம் குறிக்கிறோம்; தாள்+அம்=தாளம்; அஃதாவது அடிப்பாகம்; அடிப்படையான பாகம்; நடத்தும் பாகம்; என்று பொருள் கொள்க. தாள்+அம், என்று பிரிப்பதே தகும்; தா+ளம்—எனச் சேர்ப்பது சொல் நெறிக்கு ஒவ்வாது. 'அம்'—என்பது சொல்லின் கடைநிலை. தாள்—அடிப்பாகம். இசைக்குத் தாளமே அடிப்படை: தாளத்தில் அமைந்தது பாட்டு; தாளத்தில் அமைந்தது இசைபாடும் யாழ்க் கருவி; தாளத்தில் அமைந்தது மத்தளம் முதலிய கொட்டுகள். இசைக்குக் காலக் கணக்கு, எலும்புச் சட்டகம் போன்றது. சுர அமைப்புகள், எலும்புச் சட்டகத்தின்மேல் அமைந்த தசை போன்றவை. எனவே, தாளம்—இசைக்கு அடிப்படையானது; தாள்—அடிப்பாகம்; தாள்+அம்=தாளம்; அடிப்படையாக நின்று இசையை நடத்தும் பகுதியே தாளம். 'தாளம்'—எனும் சொற்பொருள் மேலும் ஆராய்தற் குரியது. ஆதிமக்கள் கூடி ஆடுங்கால் பாதத்தால் உண்டாய ஒலிக்குத் 'தாளம்' என்றனர். இவ்வாறு சில நண்பர்கள் கூறுகின்றனர்.

தாளம் போடும்வகை :

"கொட்டும் அசையும் தூக்கும் அளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்"

என்பது சிலப்பதிகார உரை மேற்கோள். (1) கொட்டுதல்— கையை அல்லது தாளக் கருவிகளை ஒன்றோடொன்று சேர்த்து அடித்தல். (2) அசைத்தல்=கையை வீசுதல் ; (3) தூக்குதல்= அடித்தபின் தூக்குதல்; (4) அளவு—எத்தனை எண்ணிக்கை அளவுக் காலமோ அத்தனை எண்ணிக்கை அளவுக் காலம். குறித்த எண்ணிக்கை அளவுக்கு—கொட்டுதல், தூக்குதல், அசைத்தல் முதலியவை சேர்ப்பதே பாணி (=தாளம்) ஆகும். 'எண்ணுமுறை நிறுத்த பண்' (அகம் 352 : 15) என்றதால், தாளம் எண்ணிக்கை உடையது.

தாளத்தின் மறுபெயர்கள் :

(1) பாணி—பண் எனும் அராகத்தைக் கால அளவுக்கு அமைப்பது பாணி. பண்>பாண்>பாணி. (2) சீர்—சொற் கட்டுகள் சேர்ந்து நடக்க உதவுவதால்—'சீர்'—எனத் தாளம் பெயர் பெற்றது.

'கிட்டி, சீர், பாண்டில் கஞ்சக் கைத்தாளம்' (பிங்கல நிகண்டு. சை. சி. கழகம். 1264 பாடல்) சேந்தன் திவாகரம் 'கோயம்= பாணி'—என்று கூறியுள்ளது. 'கோயம்' எனும் சொற்பொருள் தெரியவில்லை. கிட்டி, பாண்டில், கைத்தாளம் என்பன தாளக் கருவிகள். 'சீர்' என்றது தாளம் குறிக்கும்.

தாளக் கருவி வகைகள் :

(1) பாண்டில்—இது வட்டமானது; நடுவில் குழி உடையது. பாண்டி+இல்=பாண்டில். பாண்டி—வட்டமான குழி. பன்னாங் குழி விளையாடும் போது—வட்டமான குழியைப் (குழியில் நிறைந்த முத்துக்களை) 'பாண்டி' என்று கூறும் வழக்கு நோக்குக. பாண் டில்—வட்டமான நடுக்குழி உடைய தாளம். இவற்றை இன்று குழித்தாளம் என்று கூறுவதுண்டு.

'நுண்ணுருக் குற்ற விளங்கடர் பாண்டி' என்று மலைபடு கடாம் (4) கூறுவதால் இது அடர்த்தியாக (=செறிவாக) அமைந்து கணீர் எனும் ஓசை உடையது என்பதை அறியலாகும். மேலும் 'இமும்மென் பாண்டில்'—என்று சிலம்பு (26 : 194) சுட்டு வதால் பாண்டில் தாளம் நீண்ட இனிய ஓசை தருவது என்றும் அறியலாகும்.

(2) **பெரிய அகன்ற பாண்டில்:** இதுவும் வட்டவடிவும் நடுக் குழியும் உடையது. ஆனல், விரிவாக அகலமாக மெல்லியதாக இருக்கும். இவற்றிற்கு இன்று 'இலைத் தாளம்'—என்று பெயர்.

''இரும் பொலம் பாண்டில்''

என்று அகநானூறு (376 : 9) கூறுவதால் அகன்ற பெரிய தாளம் என அறியலாகும். (இரும்—பெரிய, அகன்ற, பொலம்—அழகிய) இசைக்கதையில் (காலட்சேபம்) இலைத் தாளத்தை முதலில் முழக்கிப் பெரும் ஆரவாரம் செய்து ஆள் சேர்ப்பது இன்றும் வழக்கு. ஊசித்தாளம் என்பது 7 அடிகள் அடித்து ஒரு வீச்சு வீசுதல். எனவே 8 எண்ணிக்கை ஆகும்.

(3) **கிட்டித்தாளம்:** இது மரத்தைப் பிளந்து வைத்துக் கொண்டு தட்டுவது. கவர்பு—பிளவு கவர்ந்த வாயை உடையது. இதற்கு மறுபெயர் **'எல்லரி'**:

''கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி'' —மலைபடு. (10)
கிட்டிசீர் பாண்டில் கஞ்சக் கைத்தாளம் —பிங்கலம் (1264)

எனும் வரிகளால் கிட்டித் தாளத்தின் உருவமும் ஒலிமமும் அறிய லாகும்.

சல்லரி வேறு, எல்லரி வேறு. சல்லரி என்றது 'டாம்பரின்' எனப்படுகிறது இன்று.

(4) **சீர்த்தாளம்:** இது கைத்தாளம் தட்டுதல் எண்ணிக்கை களை எண்ணுதல் வீசுதல் முதலியவற்றால்—சீர்களை வரையறுத்துக் காட்டும் கைத்தாளம்.

(5) **தட்டை:** மூங்கிலை, நுனியில் பிளந்து வைத்துக் கொண்டு தட்டுவது—தட்டை. ''மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி''—பத்துப் பாட்டு நச்சினார்க்கினியர் உரை. இதன் வாயானது தேரை வாய்போலப் பிளந்து நிற்பதால்—இதனைப் ''பகுவாய்த் தேரைத் தட்டை''—என்று கூறும் குறுந்தொகை (193 : 2). இது தினைப் புனத்தில் கிளி ஓட்டவும் பயன்படுத்தப் பட்டது. இதனை மேலைநாட்டு (Castanet) 'காசடானெட்' எனும் கருவிக்கு ஒப்பிடலாம். மேலைநாட்டில் பலவகைத் தாளம், தட்டை போல் உண்டு. இவை தவளைவாய் போன்றே வடிவில் இருக்கும். தட்டையைத் தாளக் கருவியாகவும் பின் தாள முழக்குக் கருவி யாகவும் பயன்படுத்தினர்.

(6) கட்டைத் தாளம்: இதனை இன்று 'ஜிப்ளாக் கட்டை' என்பர். 'பண்டரிபுரம் ஜிப்ளா'—பெரியது; அகன்றது; காசுகள் இருமருங்கும் கோக்கப் பெற்றது. (பி. சாம்பமூர்த்தி—லயவாத்தியம் 1959 : பக் 82) இனி, லயம்—என்பதைப் பண்டைத் தமிழர் 'கால இயக்கு' என்றனர். அதனைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

(7) கைச்சிலம்பு: காலில் அணியும் சிலம்பு போன்ற, இரண்டு சிலம்புகளின் உள்ளே மணிகளை நிறைத்துக் குலுக்குவது. இன்று தேங்காய் ஓட்டுக்குள் மணிகளை நிறைத்துக் குலுக்குகின்றனர். இதனை ''மொராக்கோ'' — என்பர். ஆனால், 'சிரட்டைச் சிலம்பு' எனப் பெயரிடலாம். சிலம்புவது—மாறி மாறி எதிர் ஒலிப்பது.

(8) மணித்தாளம்: சலங்கைகளைக் கோத்துக் குவித்துக் கையில் வைத்துக் குலுக்கி இசைக்கும் தாளம். இதனைப் பிற தாளக் கருவியோடு சேர்த்து முழக்குவர். ''இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்ப''—எனும் அகநானூற்று வரியால் (376 : 9) அறியலாகும். இன்றைக்கு ''all round''—என்பவரிடம் மணித்தாளம் காணலாம். இவர்களைப் 'பல்லிய வல்லார்' என்க.

சம்பந்தர் தாளம்:

சிவபெருமான், ஞானசம்பந்தர்க்குப் பரிசு ஈந்தார்—பொன் தாளப்பரிசு. நாளும் பயன்படுவது; நன்கு பயன்படுவது. தாளத்தை ஈந்து, அடியவராகிய சம்பந்தரோடு, சம்பந்தம் கொள்கிறார் பரம்பொருளாகிய சிவனார்; தாள ஒலிகளுக்கு ஏங்குகிறார். உலக வரலாற்றில் 3 ஆண்டுக் குழந்தை—தேவாரம் போன்ற திருப்பாடல் பாடிய வரலாறு யாண்டும் கிடையாது; இனிமேலும் கிட்டாது. ஆதலால் உலகமக்கள் அறியலாகும் தாளப் பெருமையை.

> ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
> ஞான சம்பந்தனுக் குலகவர்முன்
> தாளம் ஈந்துஅவன் பாடலுக் கிரங்கும்
> தன்மை யாளனை.''
>
> —சுந்தரர் தேவாரம்

தாள உறுப்புக்கள்:

லகு, த்ருதம், அனுத்ருதம் என்று சொற்களைச் சிதைத்து, இசை நூல்கள் பல நூறாண்டுகள் வழங்கி வருகின்றன. 'லகு'—

அன்று ; அலகு என்பதே உரிய சொல். அலகு—அகன்று நீண்ட பகுதி. 'த்ருதம்' அன்று; துரிதம்—என்று சொல்லல் வேண்டும்; துரிதம்—விரைவு. துர்+இதம்=துரிதம். துரத்து, துரை,— முதலிய சொல்கள் 'துர்' வேர் அடிப் பிறந்தவை. 'அனுத்ருதம்'— இதனை அரைத் துரிதம் எனலாம். துரிதம்—இரு எண்ணிக்கைக் காலம். அரைத் துரிதம்—ஓர் எண்ணிக்கைக் கால அளவு. அலகு வகைகள்—சதுசுர லகு—நான்மை அலகு ; திசுரலகு—மும்மை அலகு ; கண்டலகு—ஐம்மை அலகு ; மிசுரலகு—எழுமை அலகு ; சங்கீர்ண லகு—ஒன்பான்மை அலகு அல்லது கலம்பக அலகு. யாப்பு இலக்கணத்தில் அலகு என்பது அசைகள் சேரும் தொகுப்பு.

தாளங்களை 35 என்றும் 108 என்றும் பெருக்குவது பெரும் சிறப்பன்று. ஆயிரக் கணக்கில் கூடப் பெருக்கலாம். தாளம் எல்லாம், (அ) இரண்டின், (ஆ) மூன்றின், (இ) இரண்டு மூன்றின் பெருக்கமே என்று இசைக்கு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத் துணைப் பெருநூல் சுட்டும். (Oxford Companion to music); அது சுருக்கமும் அழகும் ஆகும். பெருக்கத்தை உள் அடக்கியதும் ஆகும்.

தமிழ்நாட்டில் தமிழிசைக் கல்லூரிகளில் இசைத்துறைச் சொல்கள் எல்லாம் சமசுகிருதம், இசையியல்—எல்லாம் வட நாட்டில் இருந்து வந்தது என்று நூல்கள் எழுதிச் சொல்லித் தந்துகொண்டே இருக்கிறார்கள். அரசர் அ. முத்தையா அவர்களும் அவர்களுடைய திருத் தந்தையாரும்—பெரிதும் முயன்று தமிழ்ப் பாடல்களைப் பரப்பினார்கள். அவர்களைத் தமிழர்கள் நன்றியுடன் நாளும் நினைத்தல் வேண்டும்.

'தமிழிசையியல்' இனிப் புதிதாக மலர வேண்டும். மலர்ந்து விளங்குவதைப் பார்க்கும் பேறு நமக்குக் கிட்டுதல் வேண்டும். செந்தமிழ்ச் செல்வி தமிழிசை இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டது ; இன்னும் கொள்ளும்.

———

இலக்கியமும் சமயமும்

"இயற்கையிற் காணப்படும் எழில்களெல்லாம், இலக்கியங்களே. உரைநடையிலும் வரலாம்.

மேற்கண்ட உண்மைகளை விளக்குவது சமயம். இலக்கியத்தைவிடச் சமயம் என்னும் மெய்யுணர்வு உயர்ந்தது. இலக்கியம் உணர்வு என்றால், சமயம் மெய்யுணர்வாகும். மக்களின் நற்குணங்களும் இலக்கியத்தில் அடங்கும்."

—அழகரடிகள்.

இன்றைப் பண் பெயர்க்குப் பண்டைப் பண் பெயர்

சென்ற பல்லாண்டுகளாகக் கூடி ஆய்ந்த சென்னைப் பண்ணாராய்ச்சிக் குழுவினர் கண்ட முடிவுகள்

1. அரிகாம் போதியே ஆம்திருத் தாண்டகம்.
2. ஆகிரிக் கொப்புமை ஆகியது பஞ்சமம்.
3. ஆரபி ஆம்பழம் தக்க ராகமே.
4. கமாசு ராகச் சமானம் தாண்டகம்.
5. காம்போதி ராகமே ஆம்தக் கேசியே
6. குந்தல வராளிக் குகந்தது நேரிசை.
7. கேதார கௌளையே காந்தாரப் பஞ்சமம்.
8. சங்கரா பரணமே பொங்குபழம் பஞ்சுரம்.
9. சாமா சமமாம் ஆந்தாளிக் குறிஞ்சி.
10. நவரோசு என்றனர் நவின்ற கொல்லியை.
11. நாட்டை ராகமே நட்ட பாடையாம்.
12. நாதநா மக்கிரியை நல்லசீ காமரம்.
13. பந்துவ ராளிநேர் வந்தது சாதாரி.
14. பூபாளம் என்கிறோம் புறநீர் மைதனை.
15. பைரவி ஆனதே பண்டைக் கௌசிகம்.
16. மத்தியமா வதிக்கே ஒத்ததுசெந் துருத்தி.
17. மோகனம் ஆயது முல்லைஅம் திறத்திறம்.
18. வெல்லுசௌ ராஸ்டிரம் வியாழக் குறிஞ்சியே.

———

மராட்டிய மாநிலத்தில் முருக வழிபாடு

[பேராசிரியர். இரா. மதிவாணன்]

குன்றுதோறுடும் குமரனும் தமிழ்க்கடவுளுமாகிய முருகப்பெருமான் இன்றளவும் மராட்டிய மாநிலத்தின் பலவிடங்களிலும் வழிபடப்பட்டுவரும் நிகழ்ச்சி தமிழர் அனைவர்க்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும். இந்தியப் பெருநிலம் முழுவதும் ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ் வழங்கியது என்பதற்கும் செந்தமிழ்க் கடவுள் செவ்வேள் வழிபாடு பெருகியிருந்தது என்பதற்கும் இது தக்க சான்றாகும்.

சென்னை நகரில் வருமான வரித்துறையில் பொறியாளராகப் பணியாற்றிவரும் மராத்திய அன்பர் திரு. விசுவநாத கைரே என்பவர் தமிழ் கற்கத் தொடங்கியதன் விளைவாக மராத்தியர்க்கும் தமிழர்க்கும் இடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்புகளைப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் 'மராத்தி காவே தமிழ்நாவே' என்னும் நூலிலும் புலப்படுத்தியுள்ளார். மராத்திய இதழ்களில் அவருடைய கட்டுரைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவருடைய புதிய ஆய்வுகள் மராத்திய அறிஞர் பலருக்கும் உவப்பூட்டி வருகின்றன. மராட்டிய மாநிலத்தில் முருக வழிபாடு சிறப்புற நடைபெற்று வருவது குறித்து அவர் கூறும் கருத்துக்களை இங்குத் தொகுத்துரைக்க விழைகிறேன்.

பூனா நகரின் தென்கிழக்கில் 50 கி. மீ. தொலைவிலுள்ள இரட்டைக் குன்றுகளின் முகட்டில் ஒரு முருகன் கோவில் உள்ளது. மராட்டிய மாநிலத்தில் உள்ள கோவில்களில் இது மிகவும் புகழ் வாய்ந்தது. இளையரும் முதியரும் செல்வரும் எளியரும் பல நூற்றாண்டுகளாக மராட்டிய மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வந்து சாதி வேறுபாடின்றி இத் தெய்வத்தை ஒருங்கு வழிபட்டு வருகின்றனர்.

குன்றின் முகட்டிலுள்ள முருகனை இவர்கள் 'கண்டோப' என்கின்றனர். இது கந்தப்பன் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிந்த வடிவமாகும். கன்னட மாநிலத்தில் முருகனை மயிலார் என்றும் மயிலாரய்யா என்றும் வழங்குகின்றனர். இது மயிலேறு ஐயன்

என்னும் செந்தமிழ்ச் சொல்லின் திரிபாகும். மராட்டிய மாநிலத்தில் கந்தப்பனுக்கு (கண்டோப) இரு மனைவியரும் ஓர் அமைச்சனும் குதிரை, நாய் ஆகியவையும் உடனிருப்பதாகக் கருதுகின்றனர். கந்தப்பன் கையில் உடைவாளும் உள்ளது. கன்னட மாநிலத்திலும் மராட்டிய மாநிலத்திலுமுள்ள முருகன் கோவில்கள் அனைத்தும் மலைகளின்மீதே அமைந்துள்ளன.

முருகனை வழிபட வருவோர் கூட்டங் கூட்டமாகக் காவடி எடுத்து ஆடிக்கொண்டு வருகின்றனர். கத்திகள் எனப்படும் நீண்ட கழிகளை ஏந்திவருகின்றனர். குன்றேறி வந்து கோவிலில் தம் நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். சூறைத் தேங்காய் உடைக்கின்றனர். 'தளி' எனப்படும் முளைப்பாலிகைகளையும் பிற பூசைப் பொருள்களையும் வைத்து 'எல்கோட், எல்கோட்' எனக் கூவிளி யெழுப்பி வழிபடுகின்றனர். ஐந்து கரும்புக் கழிகளைக் கூம்பாகக் கோட்டம் சமைத்து அதனுள் முளைப்பாலிகையை வைத்து குழுமி நின்று இறைவன் புகழைப் பாடுகின்றனர். கார்த்திகை நாள், தொண்டிரா (நவராத்திரி) வெள்ளுவா, காருவா ஆகிய நாள்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. முருகனை இம் மக்கள் கண்டோப (கந்தப்பன்), சதானன (ஆறுமுகன்) மல்ஹார் (மல்லன்) எனப் பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர். முருகன் என்னும் தமிழ்ப் பெயர் குழந்தை வடிவான கந்தன் என்னும் பொருளில் மராட்டிய மொழியில் முளகா என வழங்கிவருகிறது, சிறுவனைக் குறிக்கும் பொதுப் பெயராகவும் முளகா என்னும் சொல் மராட்டிய மொழியில் நிலைத்துவிட்டது. சிறுமியை முளகி என்கின்றனர்.

முருகனின் மனைவியருள் வள்ளியை மலைநாட்டுக் குறமகளாதலின் மலசா என்றும் தேவயானையை 'பானய்' (யானை) என்றும் குறிப்பிடுகின்றனர். மணி மற்றும் மல்லன் என்னும் இரு அரக்கர்களை முருகன் அலைத்துக் கொன்றது குறித்தும் இரு மகளிரை மணந்தது குறித்தும் பழங்கதைகள் பல வழங்கி வருகின்றன.

மராத்திய அறிஞரும் கன்னட அறிஞரும் தத்தம் மாநிலங்களில் பெருமளவில் நிலவிவரும் கந்தப்பனின் வழிபாட்டு மூலத்தை ஆராயத்தொடங்கினர். வடநூற்(றொன்ம) (புராண) மரபுகளிலிருந்து அவர்களுக்கு நிறைவான விடை கிடைத்திலது. பழந்தமிழிலக்கியங்களில் முருக வழிபாட்டின் தொன்மை மறைந்திருப்பதையும் மராட்டிய மாநிலத்தின் கண்டோப (கந்தப்பன்) தெய்வம் தமிழ்த் தெய்வமே என்பதையும் அவர்கள் அறியவேண்டும். மொழி,

மாநில எல்லைகளைக் கடந்து அறப் பழங்காலத்திலேயே முருக வழிபாடு இந் நாட்டின் பல இடங்களிலும் பரவியிருந்தது என் பதற்கு இஃது ஒரு மறுக்க முடியாத சான்றாகும். மராத்தியரும் குச்சாத்தாரும் ஐந்திரவிட மரபில் அடங்கியவராகக் கருதப்பட்டதற் கான சிறந்த சான்றாகவும் முருக வழிபாடு விளங்குகிறது.

மராத்தி மொழியிலுள்ள சொற்களின் மூலம் தமிழாக இருப் பதோடு தமிழ்ச் சொற்கள் பல வடிவு திரிந்தும் திரியாமலும் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடைக்கழக இலக்கியங்களில் காணப் பட்ட வடிவிலும் பொருளிலும் இன்றளவும் மராத்தியில் நிலைத் திருப்பது பெரிதும் வியப்பளிக்கிறது. முருகன் குறிஞ்சி நிலக் கடவுள். ஐந்திணைகளும் அவ்வந்நிலப் பூக்களால் பெயர்பெற்றவை. குறிஞ்சிப் பூவை மராத்தி மொழியினர் இன்றளவும் 'கொரன்தி' என வழங்கிவருகின்றனர். கந்தப்பன் கோவிலில் பூசை செய்வோர் 'குறவே' எனப்படுகின்றனர். இவர்களில் வள்ளி பிறந்த குறக் குடியினராகவோ அல்லது குறிஞ்சி நிலத்தவர் என்னும் பொரு ளிலோ குறிக்கப்படுபவராகலாம்.

வள்ளி ஆட்டிடையர் மகளாகக் கருதப்படுகிறது. கந்தப்பன் இடையர் வீட்டில் ஆடுமேய்த்து அவளை மணந்ததாகக் கதை வழங்குகிறது. முருகன் கோட்டம் இருக்கும் ஊர் 'ஜெஜோரி' என வழங்கப்படுகிறது. இது செச்சையூர் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாகும் என்பது ஐயமின்றி விளங்கும். செச்சை என்றால் ஆட்டுக்கடா என்று பொருள். குன்றின் மேலுள்ள செச்சை யூருக்கும் மேற்புறத்தில் கடேபத்தார் என்னும் சிற்றூர் உள்ளது. இது கடாப்புதர் என்னும் சொல்லின் திரிபு எனலாம். செச்சை யூரிலுள்ள (ஜெஜோரி) கந்தப்பனும் திருமுருகாற்றுப்படை கூறும் முருகனைப் போல நீல ஆடை உடுத்தவன். ஆட்டின் குருதியையும் தினையையும் விரும்புபவன். தமிழ் முருகன் வள்ளியைக் காதலித்து மணந்தவன் என்றும் தேவயானையை வதுவையயர்ந்து மணந்தவன் என்றும் கூறப்படுவது போன்றே மராட்டிய ஆட்டிடையர் தலைமைத் தெய்வமாகிய கந்தப்பன் இடையர் மகளைக் காதலித்து மணந்தான் என்றும் தேவயானையை மாலைசூடி மணந்தான் என்றும் கூறப்படுகிறது. 'அபுரங்காபாத்துக்கு' அருகில் கோவில் கொண்டுள்ள கந்தப்பன் அறுமுகனாகக் காட்சியளிக்கிறான். தேவகிரி யாதவ மன்னர் மரபினர்க்குக் கார்த்திகேயனே வழிபடு தெய்வம் என்பது அறியத்தக்கது.

வாகைப்பூ முருகனுக்குரியது. முருகன் கோவில் பூசாரிகள் வாகியாஸ் (வாகையோர்) எனப்படுகின்றனர். முருகன் கோவிலில்

நாட்டியமாடும் பெண்கள் 'முரலீஸ்' எனப்படுகின்றனர். முரலுதல் என்பது பாடுதலைக் குறிக்கும் சொல். பாடிக்கொண்டே ஆடும் பெண்கள் முரலியர் எனப்பட்டனர் போலும்.

மராட்டிய மாநிலத்து முருகனுன கந்தப்பன் கோவிலிருக்கும் செச்சையூர் புனாவிற்கு 50 கி. மீ. தென்கிழக்கில் குன்றின் மேலுள்ளது. இங்குத்தான் தன் தந்தையைப் பன்னிரண்டாண்டுகளாகப் பார்க்காதிருந்த வீரமறவன் சிவாசி முதன் முதல் சந்தித்தான். தந்தையும் மகனும் பன்னிரண்டாண்டுகள் ஒருவரை ஒருவர் காணாதிருந்தால் முதன்முதல் கோவிலில் சந்தித்து ஒருவர் முகத்தை ஒருவர் கிண்ணத்திலுள்ள உருகிய நெய்யில் பார்க்க வேண்டும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அதன்படி வீர சிவாசி தன் தந்தையின் முகத்தை செச்சையூர் கந்தகோட்டத்தில் கண்டான். மராத்திய தமிழ் உறவுகளுக்குப் பொற்பாலமாக இக்கோவில் இன்றும் விளங்கிவருகிறது.

———

'அறம்' என்றால் என்ன ?

'அறம்' என்பது தமிழ்ச் சொல். இதனை வடநூலார் 'தர்மம்' என்பர். அறம் என்னுஞ் சொல் அறு என்னும் முதனிலிருந்து உண்டாயது; ஆகவே, ஒருவனுடைய நினைவு சொற் செயல்களின் தீமையை அறுப்பதே அறம் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாதல் பெறப்படும். ஒருவன் சொல்வனவும் செய்வனவும் எல்லாம் அவன் எண்ணும் எண்ணத்தின் வழியாக வன்றி வேறு வகையில் நடைபெறல் இயலாது.

மறைமலையடிகள்

(இளைஞர்க்கான இன்றமிழ், பக். ௧௩0)

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

இத்தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 47-பரல் 4இல் தொடங்கப்பெற்ற கட்டுரை சிலம்பு 48-பரல் 5இல் அதுகாறும் கழகம் ஆற்றிய திருக்குறள் பணி எழுதப்பெற்றுள்ளது. அதன் பின்னும் தொடர்ந்து கழகம் திருக்குறள் பற்றிய நூல்களை வெளி யிட்டுள்ளமையால் அவற்றை இங்கே குறிப்பிடுவது முதன்மை யாகுமன்றோ?

திருக்குறள் சிந்தனை.

இந் நூல் மதுரைத் திருவள்ளுவர் கழகப்புரவலர். திருவாளர் **கி. பழனியப்பன்** அவர்களால் முதன்முதல் எழுதி வெளியிடப் பெற்றது. அஃது ஆட்சியாளர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எனவே, அதன் ஆசிரியர் அவர்களிடமிருந்து இசைவு பெற்றுக் கழக வழி வெளியிடப் பெற்றது. திருக்குறள் அதிகாரங்களைக் கோவைப்பட மனப்பாடம் செய்தற்கு இந்நூல் பெரிதும் பயன் படும். இதன்கண் எண் வரிசையில் அதிகாரத் தலைப்புகள் பால் இயல்களுடன் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இதன்கண் ஆட்சி யாளர் கழகப் புலவருடன் கலந்து சிற்சில திருத்தங்களைச் செய் துள்ளனர். இந் நூல் மனப்பாடம் செய்தற்கு எளிதாகவும், இசை கூட்டிப் படித்தற்கு ஏற்பவும் அதிகாரத் தலைப்பைக் கொண்டே திருக்குறளின் கோட்பாட்டை அறிந்து மக்கள் வாழ்க்கையினை நெறிப்படுத்துதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது. 12 பக்கங்களைக் கொண்ட இச்சிறு நூல் சிறுவர் முதல் பெரியோர் வரை போற்றிப் படித்தற்குரியதாகும்.

திருக்குறள் அதிகாரமுறை நூற்பா

இந் நூற்பாவில் முப்பால் என்று வழங்கப் பெறும் திருக் குறளில் முதலாவது அறத்துப்பால் பாயிரம், இல்லறம், துறவறம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. நான்கு அதிகாரங்களைக் கொண்ட பாயிரத்துக்கு ஓரடிப்பாடலும், 20 அதிகாரங்களைக் கொண்ட இல்லறத்துக்கு ஐந்தடிகளும் ஆருடிகளும் கொண்ட இரண்டு பாடல்களும், 14 அதிகாரங்களைக் கொண்ட துறவறத்துக்கு ஐந்தடி கொண்ட ஒரு பாடலும் ஆக நான்கு பாடல்கள் அறத்துப் பாலுக்கு அமைந்திருக்கின்றன.

அடுத்து 2வது பொருட்பாலில் உள்ள மூன்று இயல்கட்கும் பாக்கள் அமைக்கும் முறையில் முதலாவது அரசியல் 25 அதிகாரங்

கட்கும் இரண்டு பாடல்களும், இரண்டாவது உறுப்பியல் 32 அதிகாரங்கட்கும் இரண்டு பாடல்களும், மூன்ருவது ஒழிபியல் 13 அதிகாரங்கட்கும் ஒரு பாடலும் எழுதப்பெற்றிருக்கின்றன.

மூன்ருவது இன்பத்துப்பாலில் 7 அதிகாரங்களைக் கொண்ட முதலாவது களவியலுக்கு ஒரு பாடலும் 18 அதிகாரங்களைக் கொண்ட இரண்டாவது கற்பியலுக்கு இரண்டு பாடல்களும் முறையே அமைக்கப்பெற்றிருப்பது மிகவும் மகிழ்ந்து போற்றுதற் குரியது. இந்நூல் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் விருப்பத்தின்படி செந்தமிழ்ச் செல்வி 1924 பிப்ரவரித் திங்களில் முதல் சிலம்பிலேயே வெளியிடப் பெற்றது.

அதனைத் தனி நூலாக வெளியிடும் வாய்ப்பு 25 ஆண்டு கட்குப்பின் ஏற்பட்ட தென்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் தாலாட்டு

இந்த நூல் திருக்குறள் அதிகாரமுறை நூற்பா எழுதிய ஆசிரியர் மு. பொ. ஈசுவரமூர்த்தியாபிள்ளை அவர்களால் எழுதப் பெற்றது. அவர்கள் முதன்முதல் எழுதி வெளியிட்ட 'நீதிநெறித் தாலாட்டு' என்ற நூலில் முப்பாலையும் கொண்ட 'திருக்குறள் தாலாட்டு' அடங்கியுள்ளது. அது குழந்தைகளைத் தொட்டிலில் வைத்துத் தாலாட்டுவதற்கு மிகவும் பயன்படக் கூடியது. கழகம் வெளியிட்ட அந்த நூலில் காமத்துப்பால் தாலாட்டினை மட்டும் நீக்கிவிட்டு மற்ற இருபால் பகுதியைமட்டும் ஆசிரியர் அவர்களின் பேரர் ஒப்புதலோடு கழகவழி 1977இல் வெளியிடப் பெற்றது.

தாய்மார் வளர்த்த தீந்தமிழாலாகிய தாலாட்டு மெட்டில் அமைக்கப்பெற்ற 'திருக்குறள் தாலாட்டு' குழந்தைகளின் செவி வாய்ப்பட்டு அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து செம்மையான உணர்வை வளர்க்கும் இயல்புடைய சீரிய நூலாகும்.

திருக்குறள் காவடிச்சிந்து

திருக்குறளை இசையரங்குகளில் இசை அமைத்துப் பாடும் பழக்கம் சில ஆண்டுகளாகத் தமிழகத்திலே கண்டும் கேட்டும் மகிழ்ந்து வருகின்ருேம். அந்தக் கருத்து புலவர் பொ. முனியப்பன் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர்கள் இயல்பாகப் பல பாவினங்களில் செய்யுள்கள் இயற்றும் திறனுடையவர்கள் என்பது செந்தமிழ்ச் செல்வி வழி அறிஞர்கள் அறிந்து போற்றி வருகின் றனர். முருகப் பெருமான் திருக்கோயில்களில் காவடி யெடுத்து

ஆடும் வழக்கம் இருந்து வருவதை யாவரும் அறிவர். முதன்முதல் பெரும்புலவர் அண்ணுமலை ரெட்டியார் அவர்கள் 'காவடிச்சிந்து' என்னும் மெட்டில் பாக்களை ஆக்கிப் பெரும்புகழை ஈட்டியவர் ஆவர். காவடிச்சிந்து பாக்களை மேளதாளத்துடன் பாடிவரும்போது திருமுருகனுக்குக் காவடியெடுப்பவர் தம்மை மறந்து ஆடி ஓடு வதைக் காணலாம். புலவர் பொ. முனியப்பன் அவர்கள் திருக் குறள் ஒவ்வோர் அதிகாரத்தின் கருத்துக்களையும் இயன்றவரை தொகுத்து அதிகாரத்துக்கு ஒன்ருக அறத்துப்பால், பொருட்பால் இரண்டிலும் உள்ள 108 அதிகாரங்கட்கும் நான்கு அடிகள் கொண்ட 108 பாடல்கள் இயற்றியுள்ளார்கள். பாடல்களிலுள்ள அருஞ்சொற்கட்குக் குறிப்புரை தொகுக்கப்பெற்றிருக்கின்றது. இந்நூல் முதன்முதல் புதுமுறையில் ஆக்கப் பெற்ற தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

திருக்குறள் நூற்றெட்டு

கழக ஆட்சியாளர் கழகவழி திருக்குறள் 50, 60, 70 எனவும், திருக்குறள் 100, திருக்குறள் 200 எனவும் முன்பு வெளியிட்டது போல் மக்கள் நல்வாழ்வின் பொருட்டு நாளும் ஓதுதற்கும் கடவுளை மலர் தூவி வழிபடுதற்கும் திருக்குறள் நூற்றெட்டு என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட வேண்டுமென்று ஆட்சியாளர்க்குத் தோன்றியது. அக் கருத்தினை ஆட்சியாளர் திருக்குறளில் நிறைந்த புலமையுடைய அறிஞர் சிலருக்கு எழுதி அறத்துப்பால், பொருட்பாலிலுள்ள 108 அதிகாரங்களிலிருந்தும் அதிகாரத்திற்கு ஒன்று விழுக்காடு தாங்கள் விரும்பும் பாடல் ஒன்றினைத் தேர்ந் தெடுத்து அவற்றின் எண்களை மட்டும் எழுதியனுப்பும்படி வேண் டினர். வேண்டிக் கொண்டபடி சிலர் எழுதி அனுப்பினர். ஆட்சி யாளர் தாம் விரும்பிய பாடல்களையும் குறித்து வைத்துக்கொண் டனர். சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர் புலவர் மு. சண்முகம் பிள்ளை அவர்களை மட்டும் தனியே அழைத்து அவர்கள் எழுதிக் கொண்டுவந்த பட்டியினையும் ஏனைய அறிஞர் பெருமக்கள் எழுதி அனுப்பிய பட்டியினையும் எடுத்து வைத்து அவர்களோடு அமர்ந்து அதிகாரத்திற்கு ஒன்ருகத் தேர்ந் தெடுக்கப்பெற்றது.

பெரும்பான்மையோர் குறித்திருந்த ஒரே எண்ணுடைய குறட்பாக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தமுறையில் தீமை அகன்று நன்மை பெற்று நல் வாழ்வுக்கு வழிகாட்டும் 108 திருக்குறட்பாக்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றன. புலவர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் ஒவ்வொரு குறளுக்கும் தகுந்த தலைப்பும், தெளிந்த பொழிப்புரையும் எழுதித் தந்தனர். இந் நூற்பாக்

களை இசைப்புலவர்கள் இசைப்பா (கீர்த்தனை) முறையில் அமைத்து இன்னிசையோடு பாடுவதற்கும் இந்நூல் பயன்படுகின்றது என்று இசைப்புலவர்களும் போற்றுகின்றனர். இந் நூல் சென்னையில் 'வள்ளுவர் கோட்டம்' திறக்கப்பெற்ற ஆண்டில் வெளியிடப் பெற்றது என்பது மகிழ்தற்குரியதாகும்.

திருவள்ளுவர் சித்தாந்த சைவர்

திருக்குறள் எல்லா நாட்டினர்க்கும் எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவான நூல் என்று பேசப்படுவது யாவரும் அறிவர். அதனுல் எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும் அதனைப் போற்றிப் புகழ்கின்றனர். தமிழிலே செய்யப்பட்ட முதனூல் எனினும் உலகி லுள்ள பெரும்பான்மையான திருந்திய மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றது. தமிழிலே பல்வேறு சமயத் தினர் திருக்குறளைத் தங்கள் தங்கள் நூலென்று போற்றி அதற்கு உரை எழுதியுள்ளனர். உலகத்திலே பெரும்பான்மையோரால் பேசப்படும் ஆங்கிலத்தில் மட்டும் பல மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

இங்ஙனமெல்லாம் பல்வேறு நாட்டினரும், பல்வேறு மொழி யினரும் போற்றிவரும் நூல் எனினும் அது முதன்முதல் தமிழ் நாட்டிலே தமிழில் 2000 ஆண்டுகட்கு முன்பே இயற்றப்பட்ட நூலாதம். தமிழ்நாட்டின் தொன்மைநெறி 'சைவசமயம்' என்பது ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை. உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் அத் தொன்மைநெறியைப் பின்பற்றிப் பிறந்தவராகவே இருத்தல் வேண்டும். ஆகவே திருக்குறளில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இலைமறை காய்போல் ஆங்காங்கே பொதிந்து கிடப்பவற்றைச் சைவசித்தாந்தப் பேரறிஞர் தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி சிவத்திரு வாலையானந்த அடிகள் 'திருவள்ளுவர் சித்தாந்த சைவர்' எனும் தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி 4ஆம் சிலம்பில் எழுதி யுள்ளனர். அதனைத் தனி நூலாக வெளியிடவேண்டுமென்று பலகால் எண்ணினும் வள்ளுவர் கோட்டம் திறக்கப்பெற்றதும் அதனை வெளியிட முனைந்தனர். தமது கருத்தினைத் தவத்திரு அழகரடிகளிடம் தெரிவிக்கவே உவகையோடு வரவேற்று நூலை உருவாக்கி அதனை வெளியிடுவதற்கு ஏற்றபடி செம்மை செய்து அதற்கு அணிந்துரையும் எழுதித் தந்தார்கள். 1976 செப்டம்பர்த் திங்களிலே 'திருவள்ளுவர் சித்தாந்த சைவர்' என்ற அரிய நூல் வெளியிடப்பெற்றது.

சைவசித்தாந்தத்தில் குறிப்பிட்டுள்ள மெய்யுணர்வைக் குறிப்பிடும் தத்துவங்கள் முப்பத்தாருகும். திருக்குறளில் குறிக்கப் பெறும் 'மெய்யுணர்வு' என்பதும் முப்பத்தாருவது அதிகாரம் ஆகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இங்கே 16ஆம் நூற்ருண்டில் வாழ்ந்து மறைந்த சைவ எல்லப்ப நாவலர் தாம் இயற்றியருளிய திருவருணைக் கலம்பகத்தில்,

''சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின்மேற் றெய்வமில்''

என்ற கட்டளைக் கலித்துறைப் பாவில் குறிப்பிட்டுள்ள கருத்து இந் நூலுக்கு அரண் செய்கிறது என்று சொன்னுல் அது மிகை யாகாது.

சிறுவர்க்கான திருவள்ளுவர் நாடகம்

இதனை எழுதிய திருவாளர் **என். கே. வேலன்** (குழந்தை) பி. ஏ., அவர்கள் புகழ்பெற்ற கழக நூலாசிரியர்களில் ஒருவராவர். மேட்டூர், அணைகட்டுவதற்குரிய இடத்தை அரசுக்குத் தேர்ந் தெடுத்துக் குறிப்பிட்டவரும், புகழ்பெற்ற கண்காணிப்புப் பொறி யரும், தமிழ்மொழியோடு சமயத்தையும் இணைத்துப் புதுப்புதுக் கருத்துக்களை இணைத்து எழுத்து வழியும் பேச்சு வழியும் வெளிப் படுத்தியவருமான பேரறிவுச் செல்வர் **பா. வே. மாணிக்க நாய்க்கர்** அவர்களுடைய உடன் பிறந்த தங்கையின் மகனுராவர். அவர்கள் கல்லூரிப்படிப்பு முடிந்ததும் காவல்துறையில் தொடக்க ஆய்வாளர் (Sub-Inspector) ஆக அமர்த்தப் பெற்ருர்.

முதன் முதல் அவர்கள் திருநெல்வேலியில் அவ் வேலையினை ஒப்புக்கொண்டனர். அப்போது கழக அமைச்சர் வ **திருவரங்கம் பிள்ளை** அவர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு திரு வேலன் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனுல் எழுத்தாளர் உலகில் இடம் பெறலானுர்கள்.

செந்தமிழ்ச் செல்வியில் அறிவியற் கருத்துக்களையும் இலக்கியக் கருத்துக்களையும் கட்டுரை வடிவில் முதன்முதல் எழுதிவந்தார்கள். அவை மண்ணும் விண்ணும், இயற்கையும் செயற்கையும் என்ற தலைப்புக்களில் கழகவழி நூல்களாக முதன்முதல் வெளியிடப் பெற்றன. பின்னர்த் தொடர்ச்சியாகச் செல்வியில் இடையிடையே கட்டுரைகள் எழுதுவதோடு கழகம் விரும்பும் தலைப்புக்களில் நூல் களும் எழுதி வரலாயினர்.

அவர்கள் காவல் துறையில் 1931 முதல் 1962 வரை தொடக்க ஆய்வாளராகவும், உதவி ஆய்வாளராகவும், துணைக் கண்காணிப்பாளராகவும், மாவட்டக் கண்காணிப்பாளராகவும் படிப்படியே உயர்வு பெற்றுப் புகழோடு 1962இல் ஓய்வு பெற்றார்கள். காவல் துறையில் அவர்கள் ஆற்றிய புகழத்தக்க பணியின்பொருட்டுப் பதக்கமும் பாராட்டும் பெற்றனர். இந்தியாவுக்கு உரிமை கிடைத்த போது அதற்காகவும் அவர்கட்குப் பதக்கம் கிடைக்கப்பெற்றது.

ஓய்வு பெற்று இரண்டாண்டுகட்குப்பின் திருநெல்வேலியில் பொருநையாறு கடலோடு கலக்கும் இடத்தருகே பெரிய நிலப் பரப்பில் நிறுவப்பட்டிருந்த "தாரங்கதாரா ரசாயனத் தொழிற் சாலையில் பாதுகாப்பு அதிகாரி (Security Officer) யாக அமர்த்தப் பெற்றார். அத் துறையில் 6 ஆண்டுக்காலம் பணிபுரிந்து தமது குடும்ப நலத்தின்பொருட்டு விடுதிபெற்றுச் சென்னைக்கு வரக் கருதியபோது தொழிற்சாலையின் நிறுவனர் அவர்களுடைய திறமையினைக் கருதி மேலும் பணிபுரியும்படி அவர்களை வற்புறுத்தினர். அதனை ஏற்க முடியாத சூழ்நிலையில் நிறுவனருடைய நல்லெண்ணத்தோடு விடுதிபெற்றுச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

அவர்கள் காவல்துறையில் பணியாற்றும்போதும், இரசாயனத் தொழிற்சாலையில் பணியாற்றும்போதும் ஓய்வு நேரங்களில் படிப்பதோடு நூல் எழுதுவதையே இன்பமாகக் கொண்டனர். அவர்களைக் காவல் துறைக்குரிய உடையோடும் பாதுகாப்பு அதிகாரிக்குரிய உடையோடும் பார்த்தவர்கள் அவை இல்லாதபோது பார்ப்பின் எளிமையாகவும் அன்பாகவும் காட்சியளிப்பர். எப்போதும் கடவுள்பற்று மிக்குடையவர். அதிலும் முருகக் கடவுள்மீது அளவிறந்த பற்றுடையவராவர்.

அவர்கள் எழுதிய நூல்கள் யாவும் தொடக்க முதல் இன்றுகாறும் கழகவழியே வெளியிடப்பட்டு வருகின்றன. அவர்கள் எழுதிய நூல்கள் ஏறக்குறைய 90 வரை இருக்கும். அறிவியற் கருத்துக்களைக் கதை வடிவில் சிறுவர்கட்கு உவகை தரும் வகையில் எழுதிவருபவர். அம் முறையில் காற்றின் கதை, சூரியனின் கதை, ஒளியின் கதை, அணுவின் கதை, பூமியின் கதை, நிலக்கரியின் கதை, மலையின் கதை, நீரின் கதை, கடலின் கதை, உப்பின் கதை, மின்சாரத்தின் கதை, நிலவைச் சுற்றிய கதை, பறவைகளின் கதை, விலங்குகளின் கதை, யானையின் கதை, ஒட்டகத்தின் கதை, நாயின் நன்றி, குரங்கின் விடுதலை என்ற தலைப்புக்களில் பல கதை நூல்களை எழுதியுள்ளார்கள்.

சிறுவர்க்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் கழக இனிய கதைகள், கழகப் பூங்கதைகள், அயல்நாட்டுச் சிறுகதைகள், அயல்நாட்டுக் கதைகள் என்ற தலைப்புக்களில் சில நூல்கள் எழுதியுள்ளனர்.

அவற்றில் மின்சாரத்தின் கதைக்கும், நிலவைச் சுற்றிய கதைக்கும் தமிழகவரசு ரூ. 500/- விழுக்காடு பரிசுத்தொகை வழங்கியுள்ளது.

அடுத்து அவர்கள் சென்னையில் நிறுத்தப்பட்டிருக்கும் புகழுடையவர்களின் சிலைகளைப் பற்றி நூல் ஒன்று எழுதியுள்ளார்கள். அதனையும் பாராட்டித் தமிழகவரசு ரூ. 500/- வெண் பொற்காசு பரிசளித்தனர்.

அந்த நூல் வெளியிடப் பெற்றபின் சென்னை மாநகரில் நிறுத்தப்பட்டிருக்கும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மூதறிஞர் இராச கோபாலாச்சாரியார் ஆகிய மூவர் திருவுருவச் சிலைகளைப் பற்றிய குறிப்புக்களும் படங்களும் அதன்கண் அச்சிட்டுச் சேர்க்கப் பெறுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன என்பது அறிதற்பாலது.

குழந்தை எழுத்தாளர் சங்கம் போட்டி ஒன்று அமைத்து அறிவித்தவாறு திருவேலன் அவர்கள் "மாமாவின் ஆராய்ச்சிகள்" என்ற தலைப்பில் நூல் ஒன்று எழுதிக் கையெழுத்துப் படியைப் பார்வைக்கு அனுப்பிவைத்தனர். அதற்குக் குழந்தை எழுத்தாளர் சங்கம் பதக்கம் ஒன்று முதற் பரிசாக அளித்தது. நூல் வெளி வந்தபின் தமிழக அரசு அதனைப் பாராட்டி 500 வெண் பொற்காசு பரிசளித்தது இங்கே குறிப்பிட்டு மகிழ்தற்குரியது.

ஆங்கிலப் பேராசிரியர்கள் எழுதிய பாராட்டுக்குரிய இலக்கியங்கள் சிலவற்றைத் திருவேலன் அவர்கள் மொழி பெயர்த்தெழுதியுள்ளார்கள். அவை கழகவழி வெளியிடப் பெற்றிருக்கின்றன. அவை மேற்கு நோக்கி, ஆதாம்பீட், டாம்சாயர், இருபெரு நகரங்கள், சிறு பெண்கள், போர் மல்லர்கள், லோர்னு முதலியனவாகும்.

அவர்கள் பணிபுரிந்த காவல் துறையைப் பற்றி அவர்களே ஒரு நூல் எழுத வேண்டுமென்று கழக ஆட்சியாளர் விரும்பி வேண்டவே, காவல்துறை என்ற தலைப்பில் அதனை அழகுற எழுதித்தரவே கழகவழி வெளியிடப்பெற்றது.

(தொடரும்)

திரு. வி. க. 'வாழ்க்கைக் குறிப் புக்கள்' தரும் மறைமலையடிகளார்

[டாக்டர் ந. சஞ்சீவி,

பேராசிரியை திருமதி கிருட்டிண சஞ்சீவி]

கடந்த **செந்தமிழ்ச் செல்வி** (ஏப்பிரல், 1979) இதழில் எழுதப் பட்டுள்ள முதன்மைக் கட்டுரை எங்களைப் பெரிதும் கவர்ந்தது. மறைமலை அடிகளார் பற்றிய அக் கட்டுரையில் தமிழ்ப் பெரியார் தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களின் 'உறுதியுரை'யாக ஒரு மேற்கோள் எடுத்த எடுப்பிலேயே காட்டப்பட்டுள்ளது. அதைக் கண்ணுற்றதும் தமிழ்த்தென்றல் திரு. வி. க. **மறைமலை அடிகளார்** மாட்சி பற்றித் தமது மணிவிழாக் காலத்து (1944) அரும் பெரும் படைப்பாகிய 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' வாயிலாகத் தெரிவிக்கும் செய்திகளைத் திரட்டிப் பார்த்தல் தகும் - பயன் தரும் என்று பட்டது. பயன் இக் கட்டுரை.

மறைமலை அடிகளார் பற்றித் திரு வி. க.வின் 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' தரும் முதல் செய்தி (பக்கம் 156—7) வருமாறு:

> அந் நாளில் மறைமலை அடிகள் 'குகானந்த நிலையம்' போதருவர். இரவில் நாங்கள் இருவேமும் ஆராய்ச்சி முறையில் ஏதேனும் பேசுவோம்: ஒரு போது முருகனைப் பற்றி உரையாடினோம். ஏதோ ஒரு மதில் கோழியும், சில ருத்திராக்ஷ பூனைகளும் சேர்ந்து எங்கள் உரையாடலைத் தவறான முறையில் பாம்பன் சுவாமி களிடம் உளறின போலும்! ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் ஓராண்டு விழாவிலே தலைமை வகித்த பாம்பன் அடிகள் முடிவுரையில் என்னைச் சுட்டி 'நாத்தி கன்' என்றார். இந் நாளாயின் யான் அவ் வுரையைக் கருத்திலிருத்தாது நகைத்து விடுவேன். அந் நாளைய இளமைக் கொழுமை வாளா இருக்குமோ? அது சீற்றம் மூட்டியது. சுவாமிகளும் கூட்டமும் நிலையத்தை விடுத்து ஏகும் வரை பொறுமை காத்தேன். பின்னே யான் ஐயுற்ற ஆட்களைக் கண்டபடி வைதேன். அடுத்த நாள் சுவாமிகளிடத்திலிருந்து பிழைதிருத்தத்துக்கு என்று வழக்கப்படி அச்சுத் தாள்கள் வந்தன. அவை

களைக் கொண்டுவந்த ஆள்வயம் முடங்கலொன்று தீட்டி அனுப்பினேன். அதில் 'நானை அடிகள் நிஷ்டையில் அமரும் வேளையில் முருகனை நோக்கி என் நிலையைக் கேளுங்கள். பின் என் நிலை குறித்து முடிவுக்கு வாருங்கள்.' என்று குறித்திருந்தேன். முடங்கலைக் கண்டதும் சுவாமிகள் வண்டியேறி ஏழை வீட்டை அடைந்தார்கள். சுவாமிகளைக் கண்டதும் அவரை ஒரு பீடத்தில் வீற்றிருக்கச் செய்தேன். குமர குருதாசர் என்னை நோக்கி 'உன் முடங்கல் என் நெஞ்சை அரிக்கிறது. பயல்கள் என்னென்னவோ சொல்லி விட்டார்கள்' என்று மொழிந்ததும், யான் சுவாமிகளின் நிலை கண்டு வருந்தி வணக்கம் செய்தேன். இன்னின்னவர் இப்படி இப்படிச் சொன்னார் என்று அடிகள் அருளிச் சிறிது நேரம் வெவ்வேறு பொருள் பற்றிப் பேசி விடை பெற்றார்கள். கோள்மூட்டிகளின் அட்டவணை கிடைத்தது. அவர்களிற் சிலர் படிப்பாளிகள்

மேற்கண்ட மேற்கோளால் ஆம். கோள் பற்றிய மேற்கோளால்!—விளங்கிக் கொள்ளத் தக்கன வருமாறு :

1. திரு.வி.க.—மறைமலையடிகள் பேச்சையுமே திரித்துக் கூறிக் கோள்மூட்டும் 'பண்பாடு' பெற்ற தமிழர்கள் நமக்கு முன் தலைமுறைகளிலும் இருந்தனர்—சங்கத் தமிழர் சந்ததிகளாகவும்!

2. கோள்மூட்டிகளில் படிப்பாளிகளும் பங்கு பெற்றனர்.

3. சுவாமிகளைப் பற்றி சுவாமிகளிடமே கோள்மூட்டி இலாபம் பெறக் கருதினர். அவ்வாறாயின் அரசியல் - அதிகார - பணப்பெருக்கம் நிறைந்த இக் காலத்தில் சொல்லவும் வேண்டுமோ ?

4. ஆனால், எல்லாவற்றினும் பெருங்கொடுமை பாம்பன் சுவாமிகள் (போன்றவர்களே) கோள் மூட்டிகளின் உரைகள் உண்மையா என்று ஆராயாமல்—சிறப்பாக மறைமலையடிகள்—திரு. வி. க. ஆகியோரையே நேரில் விசாரிக்காமல் கோள்மூட்டிகள் பேச்சை ,அப்படியே நம்பி ஏசிப் பேசியது. அந் நாளிலேயே (1929க்கு முன்பே) சுவாமிகள் போன்றார் நிலை இதுவாயின் இந் நாளில் கூறவும் வேண்டுமோ? 5. ஆனால் ஒன்று. தம் தவறு உணர்ந்ததும் தற்பெருமை பாராட்டாமல் - தன்னினும் இளையவர் என எண்ணாமல் - உரியவரிடம் உண்மை கூறி உருகியது.. இது

வழுவாயினும் பெரிய கழுவாய் அன்றோ? இச் சான்றாண்மையும் இன்று சான்றுக்கும் இல்லாமல் சாவாண்மை பெறுகிறது!

திரு. வி. க. 'வாழ்க்கைக் குறிப்புகள்' கூறும் இரண்டாவது குறிப்பு (பக்கம்: 163-9) நீண்டது. எனவே அப் பகுதியின் சிறந்த குறிப்புகளுள் சில வருமாறு:

(1) 'அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக் கொண்டு வேதாசலனாராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கிறார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனார் தமிழ்—செந்தமிழ்—சங்கத் தமிழ்—என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவும் செய்தது. இந் நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ் நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனார்க்குண்டு என்று அறுதியாகக் கூறுவேன். அவர் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்; வடமொழியும் தெரிந்தவர்.'

(2) 1929ஆம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் சுவாமிகள் முயற்சியால் சுவாமிகளின் பள்ளியில் **சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்** சார்பில் சைவர் மகாநாடொன்று கூடியது. அது **மறைமலை அடிகள்** தலைமையில் நடைபெற்றது. அம் மாநாட்டில் **திரு. வி. க. திருஞானசம்பந்தர்** பற்றிப் பேசியிருக்கிறார். அது பற்றி **மறைமலையடிகளார்** மனம் திறந்து பேசிய மொழிகள் வருமாறு:

"நமது ஆண்டவன் **ஆளுடைய பிள்ளையாரின்** மூலமாகவே இறைவனைக் காணல் வேண்டுமென்ற உண்மையை அறிவானும், அனுபவத்தானும் மிகத் திறம்பட அழகமையப் பொருத்திக் காட்டி நம்மனைவர் நெஞ்சையெல்லாம் நீராயுருக்கிய திருவாளர்—**திரு. வி. கலியாண சுந்தர முதலியார்க்கு** நாம் இப் பிறவியல்லாது எப் பிறவியிலும் கடப்பாடுடையோமாயிருத்தல் வேண்டும். திருஞானசம்பந்தர் வாயிலாக உண்மைக் கடவுட் காட்சியைக் காண்டல் வேண்டுமென எடுத்துரைத்த இவரை நாம் தெய்வமாகக் கொள்வோமாக!"

(3) **மறைமலையடிகளிடத்தில்** பலவித நல்லியல்புகளுண்டு. அவைகளுள் சிறந்த ஒன்று இரக்கம் - ஜீவகாருண்யம். அடிகளின் இரக்கப் பண்பை விளக்குதற்கு ஈண்டொரு நிகழ்ச்சி குறித்தல் சாலும்.

இராமலிங்க சுவாமிகளை யொட்டிக் **கதிரைவேலருக்கும் வேதாசல னூர்க்கும்** பலதிற வாதங்கள் நடந்தன. சிவனடியார் திருக்கூட் டங்கள் இரண்டாகப் பிரிந்தன. ஒரு கூட்டம் கதிரைவேற் பிள்ளையை ஆதரித்தது; மற்றொன்று வேதாசலத்தை ஆதரித்தது. பின்னைய கூட்டம் கதிரைவேற் பிள்ளைக்குப் பலவித தீங்கு செய்ய முயன்றது. கதிரைவேலர் மீது கல்லெறிந்தது, **அவரைப் போன்ற உருவம் செய்து பாடையிலிட்டுக் கொளுத்தியது.** இவையெல்லாம் போக, மற்றொரு கொடுமை நிகழ்த்த உறுதி கொண்டது. அஃது இராமலிங்க சுவாமிகள் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. அஃதென்னை? கொலை!

> *வழக்குக் காலத்தில்* **கதிரைவேற் பிள்ளை** *இரவு பத்து மணி வரை சிந்தாதிரிப் பேட்டையிலிருப்பார்: சில சமயம் பன்னிரண்டு மணி வரை இருப்பர்; அதற்கு மேல் புரசை நோக்குவர். ஒரு நாள் அவரை வழியிலே கொலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாம். அச் செய்தி* **வேதாசலனூர்க்கு** *எப்படியோ எட்டியது.* **வேதாசலனூர்** *இரக்கம் உடையவர்.* **இராமலிங்க அடிகளின்** *அருள் நெறியில் நிற்பவர்; அவர் என் செய்தார்? யாழ்ப் பாணத்து மாணக்கர் ஒருவர் வாயிலாகக் கொடுமை யைக்* **கதிரைவேற் பிள்ளைக்கு** *அறிவித்தனர். அன்று* **கதிரைவேற் பிள்ளை** *தக்க காவலுடன் சென்றனர், கொலைஞர் கருத்து நிறைவேறவில்லை. இந் நிகழ்ச்சியை எனக்குச் சொன்னவர்* **மறைமலையடிகளே.**

மேற்கண்ட மூன்று பகுதிகளாலும் உணரக் கூடிய சில உண்மைகள் :

(1) (அ) திரு. வி. க.வின் தமிழ்ப் புலமை; மதிப்பீட்டாண்மை.

(ஆ) மறைமலையடிகளாரின் பெரும் புலமை; சங்கத் தமிழுக்கு அவர் செய்த சிறப்பு; தொண்டு.

(2) (அ) மறைமலை அடிகளாரின் பக்தி—புலமையினும் பெரிய பக்தி.

(ஆ) தகுதி அறிந்து தம்மினும் ஏழாண்டுகள் இளைய ராயினும் (மறைமலை அடிகளார் 17-7-1876 முதல் 15-9-1950 வரை திரு.வி.க. 26-8-1883 முதல் 17-9-1953 வரை) பாராட்டும் அடிகளாரின் தன்மை.

(இ) தக்க பாராட்டில் தாராளமாய் இருக்கும் அடிகளார் பண்பு.

(ஈ) ஒரு பேச்சுக்கே நீராய் உருகும் நீர்மை.

(3) (அ) திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் தரும் திடுக்கீடு களுள் ஒன்று: பழந்தமிழ்ப் புலவர்களிடமும்—சைவர்களிடமும் காணப்பட்ட குறுகிய நோக்கம்; விருப்பு வெறுப்பு வெறி; பொருமை—ஏன்?—கொலையுள்ளம்; தலைவர்கள் சன்மார்க்கராய் இருப்பினும் தொண்டர்கள் துன்மார்க்கராய் இருக்கும் இயல்பு. இதனாலேயே போலும் இந் நாளில் உலகு புகழ் ஜே. கிருட்டிணமூர்த்தி போன்ற தத்துவ ஞானிகள் எவ்வித அமைப்பும் (organization) வேண்டாமை.

திரு. வி. க 'வாழ்க்கைக் குறிப்புகள்' தரும் மூன்றும் செய்தி (பக்கம் : 767) வருமாறு :

'தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபைக்குத் தலைமை தாங்கச் சென்ற சுவாமி வேதாசலமென்னும் மறைமலையடிகள் சாதிச் சைவரிடைப்பட்ட பாட்டை யான் அறிவேன். அப்பாடு 'சாதி வித்தியாசமும் போலிச் சைவரும்' என்றொரு நூல் எழுத அவரைத் தூண்டியது. அந்நூல் மறுப்புகள் பிணக்கைப் பெருக்கின. பிணக்குப் படிப்படியே வளர்ந்தது; வெவ்வேறு உருவங் கொண்டது; இறுதியில் நட்ட ஈடு வழக்காய் முடிந்தது; அவ் வழக்கு எனக்கு ஒரு பெரும் பாடமாயிற்று.

மேற்கண்ட மேற்கோள் தெளிவுறுத்தும் உண்மை :

(அ) மறைமலையடிகளாரும் சீர்திருத்த உணர்வு காரணமாக—அறிவுடைமை காரணமாகத் தம் சமயத்தவரிடமும்—அதுவும் சைவரிடை பட்டபாடு. (ஆ) அந்தத் துன்பம் காரணமாகப் புது நூல் பிறந்தமை. (இ) மறைமலையடிகளாரே (திரு. வி. கவுடன்) பாம்பன் சுவாமிகளாலும் சைவ 'நன்' மக்களாலும் பிறழ உணரப் பட்டார் எனில் நம் போல்வார் நிலை சொல்லவும் வேண்டுமோ? ஆனால், அறிஞர் படும் பாடெல்லாம் கால அடைவில் அவர் வழியினர்க்கேனும் வாழ்வு வழங்கும், அறிவுடையோர் துன்பம் பொறுக்கும் தூய்மைத் தவத்தின் பயன் அதுவே ஆகும்.

———

தமிழகத்தின் பெருமையும் குறைபாடுகளும்

[திரு. என். கே. வேலன்]

தமிழகத்தின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. சில ஆராய்ச்சியாளர்கள் தங்கள் நூல்களில் மாறுபட்ட கருத்துக்களைச் சேர்த்து எழுதுவதால் குழப்பம் ஏற்படுகின்றது. நடுநிலையுடன் ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து எழுதினால் நன்மை ஏற்படும். நமது தமிழகத்தின் பெருமையைக் குறைப்பது தமிழ் மக்களுக்கு இரண்டகம் செய்வது போலாகும். தமிழ்நாட்டின் வரலாற்றினை முழுமையாக எழுதுவதற்குத் தக்க சாதனங்கள் இல்லையெனச் சிலர் குறை கூறுகின்றனர். உண்மையான தமிழ்ப்பற்று உள்ளவர்கள் அங்ஙனம் கூறமாட்டார்கள்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் மறைந்து விட்டனர். தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்து தமிழமுதை உண்டு திளைத்த பாண்டியப் பேரரசு கால வெள்ளத்தில் மூழ்கி மறைந்து விட்டது. பாண்டி நாட்டின் நாகரிகம் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறுகின்றனர். சோழர் படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வந்த தொல்குடியினர் ஆவர். இராமாயணத்திலும் பாரதத்திலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தமிழன்னையைப் போற்றி வளர்த்த சோழ மன்னர்களும் மறைந்து போயினர். பாண்டிய மன்னர்கள் தமிழ்ப் புலவர்களாக வீற்றிருந்தனர்.

சேர நாடு இப்பொழுது கேரள நாடாகப் பிரிந்துவிட்டது. அது தனி நாடென்றும் மலையாள மொழி தனிப்பட்ட மொழியென்றும் பேசுகின்றனர். வரலாற்று உண்மைகளையும் சான்றுகளையும் நம்ப மறுக்கின்றனர். இவர்களை மாற்றியவர்கள் யாரென்று எண்ணிப் பார்க்க வேண்டும். சேர மன்னர்கள் தமிழ்ப் புலமை பெற்றவர்களாக இருந்தனர். அவர்கள் தமிழ்ப் புலவர்களை அன்புடன் ஆதரித்து வந்தனர். சேர சோழ பாண்டியரின் பேரரசுகள் காலச் சக்கரத்தின் சுழற்சியில் சிதறிப் போயின.

வரலாறு கண்ட முதல் நிலம் தமிழகம் ஆகும். அண்மைக் காலங்களில் வரலாற்று ஆசிரியர்கள் தமிழக வரலாற்றுக்கு முதலிடம் கொடுக்க மறுக்கின்றனர். தமிழகத்தின் தொடக்க காலத்து வரலாறு சிதைக்கப்படுகின்றது. தமிழ்நாடு முழுநிறைவுடைய நாடு என்பதைக் கருத்தில் கொண்டாலன்றித் தமிழக வரலாற்றின் உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. தமிழகத்திற்குச் சொந்தமாக இருக்கும் மிகச் சிறந்த மொழி ஒன்று உண்டு.

அது தென்னாட்டு மொழிகளுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்கு கின்றது. அதற்கு இலக்கணமும் இலக்கியமும் உண்டு. பதினாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்மொழி உயிர்த்துடிப்புடன் உலவி வருகின்றது.

தனித் தமிழ் பேசித் தனித் தமிழ் நாகரிகத்துடன் நம்முடைய தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தனர். ஆரியர்கள் வந்த பிறகு உயர்வு தாழ்வு கருத்துக்களையும் ஆரிய மொழியினையும் நம் நாட்டு மக்கள் மீது புகுத்தினர். ஆரிய மொழியினைத் தமிழில் கலந்து பேசிய வர்கள் உயர்வு பெற்றனர். வடநாடு முழுவதும் மொழிகள் ஆரிய மயமாயின. தென்னாட்டில் ஆரிய மொழியைப் புகுத்துவதற்குப் பாடுபட்டவர்கள் உயர் வகுப்பினர் எனக் கூறிக்கொண்டனர். இம் முயற்சிகளால் சமய வாழ்வில் குழப்பமும் சமுதாய வாழ்வில் வேறுபாடுகளும் தோன்றின. மொழித் துறையிலும் இலக்கியத் துறையிலும் தமிழகம் தனிப் பண்பினைக் காத்து வருகின்றது.

ஆரிய இனத்தவரும், அவர்களுடன் இனக் கலப்பு செய்து கொண்டவர்களும் தமிழகப் பண்பாட்டினை மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர். ஆரியர் வருவதற்கு முன் நமது நாடு முழுவதும் வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தவரே என்பது புதை பொருள் ஆராய்ச்சிகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது. மனித நாகரிகம் தென்னகத்தில்தான் தோன்றி வளர்ந்தது. வடக்கில் குழப்பம் ஏற்பட்டபோதெல்லாம் தென்னகம் தூய்மையான இயக் கங்களை வளர்த்துத் தமிழர் பண்பாட்டைக் காத்து வந்திருக் கின்றது. சிந்து வெளியில் ஹரப்பா, மொகெஞ்சோதாரோ புதை பொருள் ஆராய்ச்சிகளில் கண்டறிந்த உண்மைகளை மாற்று வதற்குச் சிலர் முயற்சி செய்கின்றனர். நமது நாகரிகம் மிகவும் தொன்மையுடையது என்பதையும் உலக நாகரிகங்களுக்கெல்லாம் மேம்பட்டது என்பதையும் எவரால் மறுக்க முடியும்? ஒரு கூட்டம் வேண்டுமென்றே வெளி உலகத்தாரின் ஆராய்ச்சிக் கண்களை மறைத்து வந்தது. இப்பொழுது மேல்நாட்டினர் விழிப்படைந்து பழைய கருத்துக்களை மாற்றிக்கொண்டனர்.

தமிழர்கள் எனக் கூறிக் கொண்டு நம்மிடையே சிலர் தமி ழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தீங்கு செய்து வருகின்றனர். இதனால் தான் பாரதியார்,

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்"

என இடித்துக் கூறுகின்றார்.

மூவேந்தர்கள் இமயம் முதல் குமரிவரை ஆட்சி நடத்தி உலகப் புகழ் பெற்றனர். இப்பொழுது தமிழகம் சுருங்கிக்

கொண்டே வருகின்றது. ஆந்திரமும் கேரளமும் தமிழ் அன்னையை விட்டுப் பிரிந்து போயின.

> ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ் கூறும் நல்லுலகம்''

என்ற நிலையும் போய்த் தமிழ்நாடு இன்னும் சுருங்கிவிட்டது. ஆரிய மொழி கலந்துவிட்டதால் கேரள மக்களின் மொழியும் நடைமுறைகளும் மாறிவிட்டன.

அயல்நாட்டினரைக் கவர்ந்து அவர்களை இங்கே வருமாறு தூண்டியது தென்னகமாகும். தமிழர்களின் செல்வச் சிறப்பு தில்லியில் ஆண்ட முகலாய மன்னர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தென்னாட்டு மன்னர்களின் கருவூலத்தில் பொன்னும், மணியும், முத்துக்களும், குவிந்து கிடந்தன. நம்முடைய செல்வங்களையெல்லாம் முகலாயர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். களப்பிரர் காலத்தில் தமிழகம் இருண்ட சூழ்நிலையில் இருந்தது. இந்துமதத்தைப் பாதுகாக்க வருகின்றோம் என்று சொல்லிக்கொண்டு விசயநகர மன்னர்களும் அவர்களுடைய ஆளுநர்களும் வந்தனர். அவர்களது ஆட்சியில் நன்மையும் தீமையும் கலந்திருந்தன. நாயக்க மன்னர்கள் தெலுங்கிற்கு முதலிடம் கொடுத்தனர். ஏராளமான தெலுங்கர்களைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் குடியேற்றினர். சாதி வேறுபாடு அதிகமாக இருந்தது. 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' என்ற நீதிமுறையும் வந்துவிட்டது. பார்ப்பனர்கள் சமுதாயத்தில் மதிப்புடையவர்களாக இருந்தனர். உயர்வகைக் கல்விக்குப் பார்ப்பனர்களே உரியவர்களாக எண்ணப்பட்டனர். மதுரையில் பதினாயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் தங்கியிருந்து படித்தனர். இவர்கள் அனைவரும் வேதிய குலத்தவர்களே. விசயநகரப் பேரரசரும் நாயக்க மன்னர்களும் அவர்களுக்கு மானியங்கள் வழங்கினர்.

பொதுமக்கள் நடத்திய பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்க உதவி கிடைக்கவில்லை. பல்லவ ஆட்சியில் வடமொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. தமிழில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டது. இரு மொழிகளும் கற்றவர்களே புலவர் எனக் கருதப்பட்டனர். மராட்டியர் ஆட்சியில் தமிழகத்தில் அமைதியில்லாமல் இருந்தது. சண்டையும் சச்சரவுமாக இருந்தது. டச்சுக்காரர்களும், போர்த்துகீசியரும், பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் போட்டியிட்டுக் கொண்டு தமிழகத்தைச் சுரண்டிக் கொண்டுபோயினர். வாணிபத்திற்காக வந்த வெள்ளையருக்கு நாடுபிடிக்கும் ஆசை வந்துவிட்டது. முடிவில் ஆங்கிலேயருக்கு அடிமையானோம்.

காந்தி அடிகளின் தலைமையில் அறப்போராட்டம் நடைபெற்றது. தமிழ்மக்கள் வீரத்துடன் முன்னணியில் நின்று

போராட்டத்தை நடத்தினர். மக்களின் மனத்தில் எழுந்த நாட்டுப் பற்றுக்கும் விடுதலே வேட்கைக்கும் தூண்டுகோலாக இருந்தவர் சுப்பிரமணிய பாரதியார். ஆங்கிலேயரை எதிர்த்துக் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனர் சிறையில் வாடியதைப் பாரதியார்,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலேயோ"

என உள்ளம் வெதும்பிப் பாடினர். 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் வெள்ளேயர் வெளியேறினர். நாடு விடுதலே அடைந்தது.

இத்துணைப் பேரிடர்களுக்கிடையே தமிழன் சாகாமல் தப்பியதற்குக் காரணம் தமிழ் ஒன்றே. தமிழன் உள்ளத்தில் தமிழன்றி வேறு எதுவும் ஆட்சிசெய்ய இடம் கொடுப்பதில்லே. இப் பண்பினேத் தமிழ் அவனுக்குக் கொடுத்திருக்கின்றது. தமிழ்மொழியை வளர்க்கவும் காக்கவும் ஆதி முதல் நம்முடைய முன்னேர்கள் எந்த முறையைக் கையாண்டனரோ அதே முறையினே நாமும் கையாள வேண்டும்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனே அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலே இல்லோம்
ஏமப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லே"

என்பது அப்பர் அருள்வாக்கு.

எத்தனேயோ உள்நாட்டுக் குழப்பங்களும் வெளிநாட்டுப் படையெடுப்புக்களும் நிகழ்ந்தும் கூட நமது அருமைத் தமிழ்மொழி இடையீடின்றி வளர்ந்து வருகின்றது. இதைப் போல் உலகில் வேறு எந்த மொழியும் போற்றி வளர்க்கப்படவில்லே.

நம்முடைய நாட்டையும் மொழியினேயும் காப்பது நமது முதற் கடமையாகும். நமது தமிழ்நாட்டுத் தலேவர்களெல்லாம் ஒன்றுபட்டு நாட்டின் நன்மைக்குப் பாடுபடவேண்டும். மாற்றனுக்கு இடம் கொடுக்கக் கூடாது. ஒற்றுமை இல்லாவிடில் நமக்குக் கிடைத்திருக்கும் உரிமை பறிபோய்விடும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனேவர்க்கும் தாழ்வு"

எனப் பாரதியார் பாடுகின்ருர்.

முடி மன்னர் ஆட்சி மாறி, இப்பொழுது குடி அரசு வந்திருக்கின்றது. மக்கள் தேர்ந்தெடுக்கும் தலேவர்களே ஆட்சி நடத்துகின்றனர். தமிழ்நாட்டிற்குத் தமிழர்களின் அரசு கிடைத்திருக்கின்றது. இந்த வாய்ப்பினே நழுவ விடாமல் அனேவரும் ஒத்துழைத்தால் நாடு நலம் பெறும்.

———

பெருமையின் பெருமை

[புலவர் இரா. இளங்குமரன்]

திரிசிரபுரம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் சிவநெறிச் செம்மல் ஆறுமுக நாவலர் அவர்களும் ஒருமுறை மதுரைத் திருக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தனர். வழிபாடு நிகழ்த்திய குருக்களுக்கு முதலாவது யாருக்குத் திருநீறு வழங்கு வது என்னும் திகைப்பு உண்டாயிற்று. அதனைக் குறிப்பால் உணர்ந்த நாவலர், "அம்மையும் அப்பரும் ஆகியவருக்கே (மீனாட்சி சுந்தரருக்கே) முதலில் வழங்குக" என்றார். பிள்ளை அவர்கள், "அம்மைக்கும் அப்பருக்கும் தம் பிள்ளைமேலேயே பேரன்பு; ஆதலால் அவருக்கே (ஆறுமுகருக்கே) வழங்குக" என்றார். தெளிவு மிக்க குருக்கள் இருவருக்கும் இடையே திரு நீற்றுத் தட்டினை நீட்டினார். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சி இது.

*　　　*　　　*

திருமலை நம்பி என்பார் திருமலையில் தங்கி வழிபாடு செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்டு வழிபட அவர்தம் மாணவரும் மருகருமாகிய இராமாநுசர் வந்தார். இராமாநுசர் திருமலைக்குத் தம்மைக் காண வருவதைத் திருமலை நம்பி அறிந்தார்; தாமே அவரை வரவேற்க நகர் எல்லைக்குச் சென்றார். அவரைக் கண்ட இராமாநுசர், "அடியேனை வரவேற்கத் தாங்களோ வரவேண்டும்? ஒரு சிறுவரை விடுத்திருக்கலாமே" எனப் பணிவுடன் கூறினார். "யானும் அப்படியே எண்ணினேன்; ஆனால் என்னிற் சிறியவர் எவரும் இல்லாமையால் யானே வந்தேன்" என்று மிகப் பணி வுடன் நம்பி நவின்றார். பெருமைக்குப்பெருமை சேர்ப்பவற்றுள் ஈதொன்று.

*　　　*　　　*

ஆபிரகாம் லிங்கன் ஒரு குதிரையில் ஏறிச் சென்றார். அவ ருடன் ஒரு செல்வனும் சென்றான். செல்லும் வழியில் எளிய ஒருவன் நடந்து வந்தான். லிங்கனைக் கண்டதும் ஒரு பக்கம் ஒதுங்கி நின்று, தன் தலையில் வைத்திருந்த தொப்பியைக் கழற்றிப் பணிவுடன் வணங்கினான். லிங்கனும் குதிரையை நிறுத்திக் கீழே இறங்கினார். தம் தொப்பியைக் கழற்றி மிகத் தாழ்ந்து வணங் கினார். உடன் வந்த செல்வன் லிங்கனிடம், "இந்த எளியவ னுக்கு இவ்வாறு பணிந்து வணக்கம் செலுத்த வேண்டுமா?" என வினவினான். "பணிவில் இவன் என்னை வெற்றி கொள்ள விட

மாட்டேன். நாட்டின் தலைவன் பணிவிலும் தலைவனாகவே இருத்தல் வேண்டும்'' என்றார் லிங்கன். செருக்குமிக அச் செல்வன், தலைவன் தகுதியறிந்து வாயடைத்துப் போனான்.

* * *

பதினான்காவது கிளமெண்டு என்பார் போப்பாக முடிசூட்டப் பெற்றார். அம் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட பிறநாட்டுத் தூதர்கள் அவருக்குப் பணிவுடன் வணக்கம் செலுத்தினர். கிளமெண்டும் அவர்களைப் போலவே பணிவுடன் வணக்கம் புரிந்தார். அவரிடம் ஒருவர் நெருங்கிச் சென்று, ''நீங்கள் ஒருவர் வணங்கினால் அதற்குப் பதில் வணக்கம் செலுத்துதல் கூடாது; அப்படி வணங்குவது போப்புக்கு வழக்கம் அன்று'' என்றார். உடனே கிளமெண்டு, ''என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; நான் நற்குணங்களை மறந்துவிடும் அளவுக்கு நெடுங்காலம் போப்பாக இருந்துவிடவில்லை'' என்றார்.

பெரியவர் பெருமைக்குக் கிழக்கென்ன? மேற்கென்ன? ''பணியுமாம் என்றும் பெருமை'' என்பது வள்ளுவர் வாக்கு.

முருகன் அடியார்களுக்கு வேண்டுகோள்

உலகம் எங்கும் நிறைந்துள்ள முருகனின் அடியார்களுடனும் பக்தர்களுடனும் தொடர்பு கொள்ளவும், முருக நெறி, முருகன் பெயர் தாங்கிய அமைப்புக்களுடனும் முருகனின் அடியார்கள் பெயர்கள் தாங்கிய அமைப்புக்களுடனும் முருகன் கோவில்களுடனும் தொடர்பு கொள்ளவும் விழைவதால் முருகன் கோவில் அறங்காவலர்கள், முருக அடியார்கள், பக்தர்கள், தங்கள் தங்கள் பகுதியில் உள்ள முருகன் கோவில்கள், மேற்படி முருக அமைப்புக்களின் வரலாறு (தோற்றம், வளர்ச்சி, தொண்டு, செயல்பாடு உட்பட) பொறுப்பாளர்களின் பெயர், அவர்களுடைய முகவரி ஆகியவற்றை அனுப்பி உதவுமாறு, ஈரோடு, முருகன் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் தொடர்பாகக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி:

தலைமைச் செயலாளர்,
முருகன் தமிழ்ச்சங்கம்,
70, பெரியார் வீதி,
ஈரோடு 638001.

செய்திகளும் குறிப்புக்களும்

இந்தியாவின் இரண்டாவது செயற்கைக்கோள்

"பாஸ்கரா" எனப் பெயரிடப் பெற்றுள்ள இந்தியாவின் இரண்டாவது செயற்கைக்கோள் இந்தச் சூன் திங்கள் 7ஆம் நாள் வானில் செலுத்தப்பட்டது. 'ஆரிய பட்டா' என்னும் முதல் கோள் 1975 ஆம் ஆண்டில் அனுப்பப்பெற்றது. 444 கிலோ எடை கொண்ட இப் புதியகோள் முந்தியதைவிடப் பல வகைகளிலும் சிறப்பானது. குறிப்பாகத் தொலைக்காட்சிப்படக் கருவிகள் இரண்டு இதில் பொருத்தப் பெற்றுள்ளன. முந்தியதைப் போலவே இக் கோளும் ருசிய விண்வெளிக் கூடத்திலிருந்தே செலுத்தப்பெற்றது.

இந்திய இயற்கைச் சூழலை ஆய்வதே இக் கோளின் முக்கிய குறிக்கோளாகும். காற்று மண்டலத்தில் உள்ள நீர்ப்பகையையும், இந்தியாவைச் சுற்றியுள்ள கடல்கள் மீதுள்ள வெப்பதட்ப நிலைகளையும் ஆய்ந்து இந்திய வானிலை ஆய்வுக் கூடத்திற்கு அவ்வப்போது இக் கோள் அனுப்பிக் கொண்மருக்கும். பூமியிலிருந்து 512 முதல் 557 வரை கி. மீ. உயரத்தில் சுற்றும் இக் கோள் ஒருமுறை பூமியை 95·2 நிமிடங்களில் சுற்றி வருகிறது. இமயமலையின்மீது மூடப்பெற்றுள்ள பனிக்கட்டியின் அளவையும் இந்திய வான் மண்டலத்திலுள்ள மேகப் படலங்களின் அளவையும் கணித்துக் கூற இக் கோள் உதவும். கி. பி. 7, 12-ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த இருவேறு கணக்கியல் பேரறிஞர்களின் பெயரும் 'பாஸ்கரர்' என்பதாகும். அவ் விருவரின் நினைவாகவே இக் கோளுக்குப் 'பாஸ்கரா' என்று பெயரிடப் பெற்றுள்ளது.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாடு

தமிழக ஆளுநர் மாண்பமை பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் சென்னையில், சூன் 8ஆம் நாள் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். இன்றைய வார இதழ்களில் புதிய எழுத்தாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு தரங்குறைந்த கதைகளைத் தீட்டி வருவதறிந்து வருத்தப் படுவதாக அவர் தெரிவித்தார். எழுத்தாளர்கள் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் நல்ல பல கருத்துக்களை மையமாகக் கொண்ட கதைகளைப் படைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

சங்கத் தலைவரான திரு. கு. ராசவேலு வணிகமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு தரக்குறைவான கதைகளை இதழ்கள் வெளியிட்டுவரும் போக்கு உடனடியாக மாறவேண்டுமென்றார். சிவப்பு விளக்குக் கதைகள் எழுதுவதைப் புதிய எழுத்தாளர்கள் நிறுத்த வில்லையென்றால் 'சிவப்பு' எழுத்தாளர்கள் படைப்பே அவர்கள் படைப்பை எதிர்த்து நிற்குமென்று திரு. அகிலன் குறிப்பிட்டார். விழாத் தொடக்கத்தில் சங்கச் செயலர் திரு. நா. பார்த்தசாரதி அனைவரையும் வரவேற்றார்.

பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை

பாட்டியாலாவில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை புதிதாகத் தொடங்கப் பெற்றுள்ளது. அதன் முதல் பேராசிரியராகப் பேராசிரியர் வைத்தியநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

துறையைத் தொடங்கி வைத்துப் பேசிய அவர் பஞ்சாப்—தமிழ் மாநிலங்களுக்கிடையே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தொடர்புள்ளது என்று குறிப்பிட்டார். பஞ்சாப் மாநிலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் பாணினி எழுதிய இலக்கண நூலுக்குச் சிதம்பரத்தில் தோன்றிய ஒருவரே முதன் முதல் உரை எழுதினர். கிரேக்க வீரர்களுடன் மற்போர் புரிந்த வடமேற்கு இந்திய வீரர்கள் தமிழக மல்லர்களுடன் தொடர்பு வைத்திருந்தனர். இரு மாநில மொழிகளுக்கிடையே உறவு உள்ளதைக் காட்டப் பல சான்றுகள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியத் தமிழ் அமைச்சர் மறைவு

மலேசிய இந்தியக் குடிமக்களின் தலைவரும் அந் நாட்டு அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவருமான திரு. டபிள்யூ டி. டி. சம்பந்தம் அவர்கள் அறுபதாண்டு நிறைவுறுந் தறுவாயில் மறைவுற்றார்.

அவர் மலேசிய நாட்டில் பிறந்தவரானாலும் தமிழ்நாட்டினுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். தம் பட்டப்படிப்பை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெற்றவர். தமிழ் இசை, கலை, தத்துவம், சமயம் போன்றவற்றில் பேரீடுபாடு கொண்ட அவர் தமிழ் மக்களிடையே மிகுந்த ஒற்றுமையை ஏற்படுத்தி வந்தார். தமிழர்கட்கு அவர் வீட்டுவாயில் என்றும் அடையா நெடுங்கதவுடனேயே காட்சி அளித்தது. தமிழகத்திலிருந்து அங்குச் சென்ற கலைஞர்கள், அறிஞர்கள், சொற்பொழிவாளர்கள். அரசியல் வாதிகள் அனைவருக்கும் பெருவிருந்தளித்து அவர் உபசரிப்பது வழக்கம். இத்தகைய அரிய தமிழர் தலைவர் பிரிந்தது தமிழ் இனத்திற்குப் பேரிழப்பாகும்.

இருண்ட காலத் தமிழ்க் கல்வெட்டு

தமிழ் வரலாற்றில் இருண்ட காலமெனக் கருதப்படும் களப்பிரர் ஆட்சிக் காலக் கல்வெட்டு ஒன்று அண்மையில் தமிழகத் தொல் பொருள் துறையினரால் இராமநாதபுர மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள பூலாஞ்சேரி என்னுஞ் சிற்றூரில் ஒரு குன்றின்மீது இக் கல்வெட்டு காணப்படுகின்றது.

சங்க காலத்திற்கும் பல்லவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற ஆட்சிமுறை, நில உடன் படிக்கை, சட்டத்துறை, நீதித்துறை போன்ற பலதுறைச் செய்திகளை இக் கல்வெட்டு கூறுகின்றது

கூற்றன் என்னும் மன்னன் காலத்திய இக் கல்வெட்டில் முதன் முதலாக நாள், மாதம் போன்ற சோதிடக் குறிப்புக்கள் காணப் படுகின்றன, தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பெற்றுள்ள இக் கல்வெட்டு தமிழ் நாட்டு ஆட்சிமுறை பற்றிய பல அரிய செய்தி களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பேருந்துகளில் மாநில மொழியிலும் ஆங்கிலத்திலும் ஊர்ப் பெயர்கள்

அண்மையில் நடைபெற்ற தென்மண்டலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தென் மாநிலங்களில் ஓடும் பேருந்துகள் அனைத்திலும் அந்தந்த மாநில மொழியிலும் ஆங்கிலத் திலும் ஊர்ப்பெயர்கள் பொறிக்கப் பெற்ற பலகைகள் இடம்பெறும் என்று முடிவெடுக்கப்பெற்றது.

இந்தி வெறிபிடித்த மாநிலங்களில் பேருந்து, மகிழுந்து எண் பலகையில்கூட எண்களை இந்தியில் பொறித்து வருகின்ற இந் நாளில் இருமொழி பொறிக்கும் முடிவு வரவேற்கத் தக்கதாகும்.

உலகச் சமற்கிருத மாநாடு

உலகத் தமிழ் மாநாடு சென்னையில் சீரும் சிறப்புமாக நடை பெற்றபின் பிற மொழியாளர்களும் தத்தம் மொழிகளுக்கு உலக மாநாடுகள் கூட்டத் தொடங்கிவிட்டனர். இவ் வகையில் நான்காவது உலகச் சமற்கிருத மாநாடு அண்மையில் செருமனி நாட்டில் பெர்லின் மாநகரில் நடைபெற்றது.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டை மதுரையில் அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் தமிழக அரசு மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு வருகிறது. இவ் வகையில் தமிழே முதலிடம் பெற்று விளங்குகின்றது.

மதிப்புரை

காவிய தரும சங்கிரகம்

[ஆசிரியர்: எ. ஆ. கிருட்டின பிள்ளை; வெளியீடு: வேதாகம மாணவர் பதிப்பகம், 66/7, அசோசியேஷன் சாலை, மாதவரம், சென்னை-60; விலை: உரு. 5-00.]

"கன்னல் பொருள்தரும் தமிழே! நீஓர் பூக்காடு;
நான் அங்கோர் தும்பி"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடற்பொருளுக்கு ஒப்பத், தமிழ் இலக்கியப் பூக்காட்டிலே கிருட்டின பிள்ளை என்ற தும்பி பூக்கள்

தோறும் நுழைந்து சேகரித்த தித்திக்கும் தேனடையே 'காவிய தரும சங்கிரகம்' என்னும் இந் நூலாகும். தேன் சுவைப்பொருளாக இனிப்பதோடு நின்று விடாமல் மருந்தாகவும் தப்பாது துணை செய்கிறது. அது போன்றே இந் நூலும் பாட்டினிமையோடு, உள்ள நோய் தீர்க்கும் ஒப்பற்ற மருந்தாயும் பயன்படக் கூடியதாகும்.

தமிழில் காப்பிய ஆசிரியரும், பிறரும் கதையை மட்டும் சொல்லிச் செல்வதோடு அமையாது அறக்கருத்துக்களை அணியிடை மணியெனப் பதித்து வைத்துள்ளனர். அத்தகைய அரிய மணிகளை மட்டும் எடுத்து மணிமாலையென இந் நூலைச் செய்திருக்கின்றார் ஆசிரியர். சங்க இலக்கியங்கள் முதல் வேதநாயகம் பிள்ளை பாடல் வரை பற்பல நூல்களிலிருந்து பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இது பல்வேறு நீதிகளைப் பாங்குறத் தொகுத்துத் தந்துள்ள பன்னூற்றிரட்டு. இயற்கையை வருணிக்கும் சில பாடல்களிலும் இலைமறை காய்போலச் சில அறவுரைகள் வெளிப்படுகின்றன. தொகுப்பாசிரியரே குறிப்பிடுவதுபோல இந் நூலில் உள்ள பாடல்களின் கருத்துக்கள் எம் மதத்தினரும் எவ்வினத்தாரும் ஒத்துக்கொள்ளக் கூடிய பொதுக் கருத்துக் கோவை என்பதில் ஐயமில்லை. இவ்வரிய நூல் தமிழ்ப் பெருமக்களுக்கு நன்கு பயன்படும்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் பரல்-௮, ௨௦௮ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவிஞர் த. கோவேந்தன், சென்னை-24	25	00
திரு. கு மோகனராஜ், எம். ஏ. சென்னை-5	50	00
,, S. V. சுப்பிரமணியம், சென்னை-20	100	00
,, Dr. பொற்கோ, சென்னை-5	100	00
செல்வி. S. லோகாம்பாள், நெம்மாரா (பாலக்காடு)	51	00
திரு. மு. ரா. பெருமாள் முதலியார், சென்னை	50	00
,, சொ. வாசுதேவன், சென்னை-30	10	00
கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்	5	00
திரு. ஆ. தி. அ. ஈசுவர், சென்னை-59	5	00
,, P. கணபதி, திருச்செந்தூர் (திருமண நன்கொடை)	25	00
,, M. பாலசுப்ரமணியம், I.G.C. சென்னை	100	00
,, R. விவேகானந்தன், சென்னை-20	100	00
உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10	00
,, ஆ சுப்பையா பிள்ளை அவர்கள் கழக மேலாளர்	5	00

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

அப்பர் அச்சகம், சென்னை-1.